405

Regis. No M. 2147

# THE AGRICULTURIST

*A monthly Journal devoted to Agriculture and its allied subjects*

19 JUL 1929

# கிருஷிகன்

ஓர் மாதாந்தர விவசாயப் பத்திரிகை

VOl XII புத்தகம் 12 | 1929௵ ஜூலை மீ 16௳ சுக்கில௵ ஆடி மீ 1௳ | No 4 பிரதி 4

Contents | பொருளடக்கம்


| Contents | | பொருளடக்கம் | |
|---|---|---|---|
| Madras Agricultural College Coimbatore Annual College-day celebrations | 81 | சென்னை விவசாய காலேஜ் கோயம்புத்தூர் வருஷாந்திரக் கூட்டம் | 81 |
| Imperial Agricultural Research Institute | 89 | இம்பீரியல் விவசாய ஆராய்ச்சி நிர்வாக சபை | 89 |
| Madras Agricultural Department Reorganisation | 90 | சென்னை விவசாய இலாகாவில் மாறுதல்களும் சீர்திருத்தங்களும் | 90 |
| Clearance of doubt in Correspondence | 93 | கடிதவினா சந்தேகமாற்று | 93 |
| Correspondence | 97 | கடிதம் | 96 |
| News & Notes | 103 | குறிப்புகள் | 105 |
| Almanack | 105 | பஞ்சாங்கம் | 105 |


Editor Rao Bahadur J Chelvaranga Raju
Jagannadha Baugh Saidapet
Annual Subscription inculding Postage Re one only

Copy Right Registered

## கவனியுங்கள்

விவசாயத்தில் இப்போது அடையும் இலாபத்தைவிட அதிக இலாபம் பெற விரும்புகிறீர்களா?

அப்படியானால் இந்தியாவிலேயே இந்தியர்களாலேயே செய்யப்பட்ட இந்திரிய வஸ்துக்களடங்கிய இயற்கை உரங்களை வாங்கி உபயோகியுங்கள்.

நாங்கள் எலும்புத்தூள், ஜவ்வு, கொம்பு சீவல், புண்ணாக்குகள் முதலிய சகலமான எருக்களையும் அந்தந்தப் பயிர்களுக்குத் தக்க எருக்களைக் கலந்தும் தயாரித்தும் விற்கிறோம்.

இயற்கை உரங்களைச் சேர்க்காமல் தற்காலம் அதிக ஆடம்பரப்படுத்தி விற்கும் செயற்கை உரங்களாகிய உப்பு உரங்களைத் தனியாய் உபயோகித்தால் கெடுதல் சம்பவிப்பதைப் போலல்லாமல் எங்கள் இயற்கை உரங்களால் எப்போதும் நன்மையே உண்டாவதோடு நிலவளமும், நாளுக்கு நாள், வாரத்திற்கு வாரம், மாசத்திற்கு மாசம் வருஷத்திற்கு வருஷம் அபிவிருத்தியடையும் என்பதில் சந்தேகமேயில்லை.

விலை முதலிய விவரங்களறிய விரும்புவோர்.—

**ஏ. ஜெ. போட்ரிக்ஸ் அண்ட்கோ.**

ஏஜண்ட் கடம்பூர் எருக்கிடங்கு

கடம்பூர் (S. I. R.)

என்று எழுதி முழு விவரங்களறியலாம்

## இந்திய விவசாயம்

### ஓர் விவசாய மாதப்பத்திரிகை

வருட சந்தா ரூ—1

இதில் சமத்தொழில், கால்நடை பரிபாலனம், கூட்டுறவு சிறு தொழில்கள் முதலிய கிருஷிகருக்கு வேண்டிய சகல விஷயங்களும் பிரதி மாசமும் வெளிவரும் (தனி சஞ்சிகை அணா ஒன்றரை)

மானேஜர்—இந்திய விவசாய ஆபீஸ்

தெப்பக்குளம் போஸ்டு திருச்சி.

---

## கம்மபாலன்

### தமிழ் மாதப்பதிப்பு

தென்னாட்டில் கம்ம ஜாதியப் பத்திரிகை இஃதொன்றே. கிராமவாசிகளுக்கவசியமான பொது விஷயங்கள் வெளிவரும். விளம்பரங்களுக்குத் தக்க சௌகரியமுண்டு! வருட சந்தா ரூ 1 தான்

ஐக்கிய சங்கங்களுக்கும் பஞ்சாயத்துகளுக்கும் வேண்டிய புத்தகங்கள் எம்மிடம் கிடைக்கும்.

ஆர். வெங்கடசாமி நாயுடு

பத்திராதிபர் கம்மபாலன்

திருச்செங்கோடு.

*Regis. No M. 2147*

# THE AGRICULTURIST

***A monthly Journal devoted to Agriculture and its allied subjects***

# கிருஷிகன்

**ஓர் மாதாந்தர விவசாயப் பத்திரிகை**

| | | |
|---|---|---|
| VOl XII<br>புத்தகம் 12 | 1929ம் ஞ ஜூலை மீ 16உ<br>சுக்கில ஞ ஆடி மீ 1உ | No 4<br>பிரதி 4 |


## Madras Agricultural College (Coimbotore)
## Annual College day celebrations

### சென்னை விவசாய காலேஜ் (கோயம்புத்தூர்)

### வருஷாந்திரக் கூட்டம்

கோயம்புத்தூரில் ஸ்தாபிதம் செய்திருக்கும் சென்னை விவசாய காலேஜின் வருஷாந்திரக் கூட்டம் 1929ம் வருஷம் ஜூலை மாதம் 9உ செவ்வாய்க் கிழமை பகல் 12 மணிக்கு காலேஜின் மத்திய ஹாலில் ஆரம்பமாயிற்று. சென்னை விவசாய டிபார்ட்மெண்டின் உயர்தர உத்தியோகஸ்தர்களெல்லோரும் ஷை காலேஜின் உபாத்தியாயர்கள், ஷை காலேஜ் சம்மந்தமான சாஸ்திர ஆராய்ச்சி உத்தியோகஸ்தர், காலேஜ் மாணவர் முதலியஎல்லோரும வந்திருந்தனர். இவர்களைத் தவிர காண்பூர் ஹார்கோட்பட்ளர் டெக்னிலாஜிகல் இன்ஸ்டிட்யூட் பிரின்சிபால் துரையவர்களாகிய மிஸ்டர் ஜெ. பௌலர், டி. எஸ். ஸி. எப். ஐ. ஸி. கோயம்புத்தூர் ஜில்லா கலெக்டர் மிஸ்டர் இ. எப். தாமஸ் துரையவர்களும், 'கிருஷிகன்' பத்திராசிரியரான ஸ்ரீமான் ராவ் பஹதூர் ஜெ. செல்வரங்க ராஜுகாரும், கோயம்புத்தூர் ஜில்லா பிரபல மிராசுதாரரான ஸ்ரீமான் வெள்ளியங்கிரி கௌண்டர் முதலிய பல பிரமுகர்களும் விஜயம் செய்திருந்தார்கள்.

### வரவேற்புப் பத்திரம்

விவசாய காலேஜ் பிரின்சிபாலாகிய ஸ்ரீமான் தாதுலிங்க முதலியாரவர்கள் அன்று விஜயம் செய்திருந்த எல்லோருக்கும் நல்வரவு

கூறி தத்தம் வேலைகளை விட்டு வந்து கௌரவித்ததற்காக வந்தனம் கூறியபோது அன்றையத் தினம் உபந்நியாசம் செய்வதற்காக தொலைதூரத்திலிருந்து வந்திருந்த டாக்டர் பௌலர் துரையவர்களுடைய அரிய வேலைகளைப் பற்றி எடுத்துரைத்தார்கள். அப்பால் சென்னை விவசாயடிபார்ட்மெண்டில் 7 வருஷக் காலமாய் டைரெக்டர் வேலை செய்தபின்னர் சமீபத்தில் உபகாரச் சம்பளம் பெற்றுப் போகப் போகும் டாக்டர் ஆன்ஸ்டெட்டைப் பற்றிப் பேசினார்கள். அப்பால் கோயம்புத்தூர் ஜில்லா வாசியாகிய திவான் பகதூர் சர். விஜயராகவாச்சாரியார் அவர்கள் (விவசாய இம்பீரியல் ரிசர்ச் கௌன்ஸிலில் உதவி அக்கிராசனாதிபதி பதவிபெற்றதற்காக வந்தனம் செலுத்துவதாகச் சொன்னார்கள். அப்பால் சென்னை விவசாய டிபார்ட்மெண்டில் கௌரவமாய் வேலை செய்து பல விவசாய சம்பந்தமான கமிட்டிகளில் ஊக்கத்துடன் உழைத்தவராகிய சர். பிராங்க் நாயல் துரையவர்களுக்கு உபசாரம் கூறி அனுப்ப உத்தேசித்த தந்தியைக் கல்லூரி டைரெக்டர் துரையவர்கள் வாசித்துக் காட்ட, அவ்வாறு தந்தியனுப்பும் தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறிற்று.

அப்பால் விவசாய மாணவர் சங்க காரியதரிசியாகிய ஸ்ரீமான் எம். சுப்பிரமணியம் அவர்கள் ஷை சங்க 1928...29ம் வருஷ அறிக்கைப் பத்திரிகையை வாசித்து முடித்தார். பின் பெரிய கரகோஷத்திடையே கான்பூர் ஹார்கோர்ட்பட்லர் டெக்னிலாஜிகல் இன்ஸ்டிடியூட் பிரின்ஸிபாலாகிய மிஸ்டர் ஜெ. பௌலர் துரை அவர்கள் செய்த பிரசங்கத்திலே முக்கியமான அம்சங்களை எடுத்து எழுதுகிறோம்.

"சாஸ்திர ஆராய்ச்சி நிபுணர்கள் பலர் இங்கிருந்தும் தூரதேசமாகிய கான்பூரிலிருந்தும் இவ்வுயரிய நடவடிக்கைகளுக்கு அக்கிராசனம் வகிப்பதற்காக என்னை வரவழைத்ததற்குக் காரணகர்த்தாக்களாகிய சங்கத்தின் அக்கிராசனர், அங்கத்தினர், முதலிய எல்லோருக்கும் நான் வந்தனம் அளிக்கிறேன். நான் விவசாயி அல்ல. அதாவது நான் விவசாயம் செய்பவனாவது அல்லது விவசாயப்படிப்பு போதிக்கப்பட்டவனாவது அல்லவென்பதை அங்கீகரித்துக் கொள்ளுகிறேன். ஆனால் விவசாயத்திற்கு இன்றியமையாத பலவகைகளின் கூறுபாடுகளைக் கண்டு ஆராய்ச்சி செய்தும், பல உபகாரமான இயற்கை எருக்கள் விவசாயத்திற்கு எவ்வளவு அனுகூலமாயிருக்கும் என்று கண்டு பிடித்தும் அவைகளை பூமியின் விளைவுத் தன்மையை அபிவிருத்தியடையச் செய்யும்படியான மார்க்கங்களைக் கண்டுபிடிக்கும் ரசாயன சாஸ்திரிகளில் நான் ஒருவ

முதலால் விவசாயத்திற்கும் எனது வேலைக்கும் அதி நெருக்கம் உண்டு என்பதை நீங்கள் அங்கீகரிக்கக் கொள்வீர்கள். முற்காலத்தில் இந்தியாவிலுள்ள நிலங்கள் இயற்கையாகவே நீர்வளம், நிலவளம் முதலியன பொருந்தியிருந்தால் அக்காலத்தில் என்போன்றவர்களுடைய உதவி இந்தியாவில் தேவையில்லாமலிருந்தது. இப்போது வரவர ஒரே நிலத்தில் ஒரேவிதமான பயிர் செய்து வந்ததாலும் அப்பயிர்கள் நிலங்களிலிருந்து கிரகித்த எருச்சத்துகளை திரும்பவும் போதுமான அளவு போடப்படாததாலும், நாளுக்குநாள் நிலம் க்ஷீணித்தமடைந்து விளைவும் குறைந்து கொண்டே வருகிறது. தற்காலம் நிலங்கள் இருக்கும் நிலைமையை கூடிய ஜல்தியில் சீர்திருத்தாவிட்டால் இந்திய கிருஷிகரின் தற்கால நிலைமை இன்னும் போகப்போக அதிக பயங்கரமான நிலைமைக்கு வந்துவிடுமென்றும், அப்பேர்ப்பட்ட நிலைமையிலிருந்து சாத்தியமானால் இந்திய கிருஷிகரை மீட்க வேண்டுமென்னும் உண்மை எண்ணத்தால் தூண்டப்பட்டு நான் அதற்காகவே,—அவர்களுடைய நிலைமையை உயர்த்துவதற்காகவே உழைத்து வருகிறேன். சாதாரணமாய் என்போன்றவர்கள் சாஸ்திர ஆராய்ச்சிக்காகவே உழைப்பதுதான் சகஜம். எனக்கு அந்த சாஸ்திர ஆராய்ச்சியைவிட இந்திய கிருஷிகரின் பரிதாபகரமான நிலைமையிலிருந்து என்னால் கூடியவரையில் மீட்க வேண்டும் என்னும் ஒரே எண்ணத்தால் தூண்டப்பட்டு அதற்காகவே நான் உழைத்து வருகிறேன். நான் யோசனை செய்து பார்த்ததில் இந்திய விவசாயிகளுடைய தற்காலபரிதாபகரமானநிலைமைக்குக்காரணம் போதிய எருவில்லாமையே என்று என் மனதில் படுகிறது; இந்தியாவிலிருக்கும் பல இந்திரிய எருக்கள் பல காரணங்களால் முழுவதும் இந்தியாவிலேயே உபயோகிக்கப்படாததாலும் அவ்வாறு உபயோகிப்பதிலும் அவைகளின் பராமரிப்பில் போதிய கவனம் செலுத்தப்படாததாலும் அவைகளாலடையக் கூடிய முழு உபகாரத்தையும் அடைவதற்கு முடியாமற் போகிறது. சர் ஜேம்ஸ் மெக்கன்ன துரையவர்கள் இந்தியாவிலுள்ள சிறந்த எருப்பொருட்கள் எவ்வாறு அவமாக்கப்படுகிறதென்பதை தெளிவாய் எடுத்துக் காட்டி எழுதியதை நீங்களெல்லோரும் வாசித்திருப்பீர்களென்றே நம்புகிறேன்.

மேலும் உலகத்திலுள்ள வேறு எந்த தேசமும் இந்தியாவிலுள்ள எருக்களை அவம்போக்குவதைப்போல் செய்ய முடியவே முடியாது என்று வற்புறுத்தி எழுதியிருக்கிறார்கள். இப்

படி இயற்கை எருச்சாதனங்களை அவம்போக்க விடாமல் தடுப்பது நம்மெல்லோருடைய கடமை என்பதாகவும் தெரிவித்திருக்கிறார்கள். ஆகையால் விவசாய சம்மந்தமான வேலை செய்யும் ஒவ்வொருவரும், உயர்தர உத்தியோகஸ்தர், கீழ்தர உத்தியோகஸ்தர்கள், விவசாய பத்திரிகாசிரியர்கள், விவசாயிகள், சர்க்கார் ரெவினியூ அதிகாரிகள் முதலிய எல்லோரும் ஒத்துழைத்து வேலை செய்தால் அவ்வாறு அவம் போக்கலைத் தடுப்பது அசாத்யமன்று என்று அபிப்பிராயப்படுகிறார். இனிமேலாவது நாமெல்லோரும் இதில் நமது கவனத்தை முக்கியமாய் செலுத்தி சீர்திருத்த முயலுவோமாக.

## அவமாக்கும் பொருட்களை எவ்வாறு எருவாக்கல்

நான் முதலில் தொழு, நாட்டுப்புறம் முதலியவைகளின் அவம் போக்கைப்பற்றியும் அவைகளை எவ்வாறு சீர்திருத்துவதென்றும் சொல்லிவிட்டு பின்னால் பட்டணங்களையும், நகரங்களையும் பற்றி சொல்லுகிறேன். மிஸ்டர் ஹோவார்ட் துரை அவர்களால் வெளியிடப்பட்ட "இந்தியாவில் கோதுமை சாகுபடி," என்ற புஸ்தகத்தைப் பாருங்கள். இந்தூர் சமஸ்தானத்தில் இதுவரையில் சதுப்பு நிலமாயும், எப்பயிருக்கும் லாயக்கில்லாமலும் பாழாய்க் கிடந்த அநேக ஆயிரம் ஏக்கர் நிலங்கள் மிஸ்டர் ஹோவார்ட் துரையவர்களின் யோசனையின்படி வடிகால் வசதிகள் ஏற்படுத்தப்பட்டு சிறந்த கோதுமை மாசூல் விளையும் வயல்களாய் மாறியிருப்பதை நான் நேரில் பார்த்தேன்.

இந்தியா முழுவதிலும் தொழுக்களைக் கூட்டுவதிலும், மாடுகள் தின்று கழித்த செத்தை கூளம் முதலியவைகளையும் சேர்த்து சாஸ்திரீதியாய் செயற்கை தொழு எருக்கள் செய்து உபயோகிக்கும் வேலையைக் கையாடி வருகிறார்கள். அவ்வாறு செய்வதால் சாதாரணமாய் இதுவரை கழிவுப் பொருட்களாயிருந்தவைகளெல்லாம் இப்போது சிறந்த தொழு எருவாக மாற்றப்படுகிறது. இதில் முக்கியமாய் கவனித்துச் செய்ய வேண்டியவைகள் சில இருக்கின்றன.

இந்த செயற்கைத் தொழு எரு என்றும் 'அடை' எரு என்றும் அழைக்கப்படும் எருக்கள் எவ்வளவு சீக்கிரத்தில் செய்து முடிக்கக் கூடுமென்று நாமெல்லோரும் ஆராய்ச்சிகள் செய்து கொண்டு வருகிறோம். இங்கிலாந்திலுள்ள மான்செஸ்டர் தேசத்திலுள்ளவர்களால் சாணி எருவை தண்ணீரில் கரைத்து தண்ணீர் ரூபமான எருவாய் உபயோகித்ததில் அடைந்த பயன்களைக் குறித்த தஸ்தாவேஜிகள்

இன்றையவரையில் சீமையிலுள்ள 'வைட் ஹால்' என்னும் கட்டடத்தில் பத்தோபஸ்தாய் வைக்கப்பட்டிருக்கிறது.

தொழுவில் கூட்டும் குப்பைகள், கழிவுப்பதார்த்தங்கள், இலை சருகுகள், களைப்பூண்டுகள், கழிவுவைக்கோல், கட்டை முதலியவைகளுடன், சாணி கரைத்த தண்ணீரையும், கால்நடைகளின் மூத்திரங்களையும் சேர்த்து எருச்சேர்ப்பதால் கழிவுப் பொருள்களெல்லாம் சிறந்த செயற்கை தொழு எருக்களாக்கப் படுகின்றன [இதைப்பற்றி முன்பிரசுரமான கிருஷிகனிலுள்ள வியாசத்தைப்பார்க்க. ப. ர்.]

டக்காவிலுள்ள சர்க்கார் விவசாயப் பண்ணையில் இம்மாதிரி முறையில் பயிர்களுக்கு பல ஏக்கர்களுக்கு உபயோகிக்கக் கூடிய அளவில் முதல் முதலாக இம்மாதிரி எரு தயாரித்திருப்பதாகக் கேட்டு சந்தோஷப்படுகிறேன். இந்தூர் சமஸ்தானத்திலோ ஆயிரக்கணக்கான வண்டிகள் செயற்கை தொழு எருக்கள் தயாரிக்கப்பட்டு இதுவரையில் எருவே யில்லாமல் கேவலமாயிருந்த நிலங்களுக்குப் போடப்பட்டதில் விளைவு அதிகரித்துக் கொண்டே வருகிறது.

சிலர் இவ்வளவு கஷ்டமெடுத்துக் கொண்டு செயற்கைத்தொழு எரு சேகரிக்க வேண்டிய பிரமேயமில்லை யென்றும், கழிவு செத்தை முதலியவைகளை நிலத்தில் கொண்டுபோய் கொட்டி விட்டால் அந்நிலமே காலாவிர்த்தியில் அக்கழிவுப் பொருள்களை எருவாக்கிக் கொள்ளுமென்றும் விதண்டவாதம் செய்கிறார்கள். ரசாயன பரீட்சைகளினாலும் சீனதேசத்தாருடைய பல ஆயிரவருஷங்கள் அனுபவத்தை அனுசரித்தும் பார்த்தால் மேற்சொன்னவாறு சொல்வது அறியாமையாலேயே என்று திட்டமாய் ஏற்படுகிறது. இவ்விஷயத்தில் இந்திய விவசாயிகள் கற்றுக்கொள்ள வேண்டிய அம்சங்கள் பல இருக்கின்றன.

முதலாவது; இந்திய விவசாயிகளுக்குத் தேவையான அளவு எரு கிடைப்பதில்லை.

இரண்டாவது அகப்படக்கூடிய அளவு எருக்களை வெளியிலும் காற்றிலும் மழையிலும் வெயிலிலும்படாமல் சரியானமுறையில் பராமரிக்கப்படாமல்அவைகளின்சத்துகள் அவம்போவதால்பூரணபலனைத் தருவதற்கு லாயக்கில்லாமலிருக்கிறது. எருக்கள் காய்ந்து போவதால் சமைந்த பயிருணவு ஆகாமல் இருப்பதால் பயிர்களால் உடனே உபயோகிக்கக் கூடிய நிலைமையிலில்லாமலிருக்கின்றன. பயிர்கள் நட்டபின் நிலமானது இந்த எருக்களை பயிர்கள் கிரஹிக்கக்கூடிய வித

மாய் பக்குவப்படுத்த வேண்டியதாகிறது. எருக்களை ஏக காலத்தில் பக்குவப் படுத்துவதிலும், பயிர்களுக்கு உணவளிப்பதிலும் நிலத்திற்கு ஆக்சிஜன் என்னும் பிராணவாயு அதிகமாகத் தேவையாயிருக்கிறது. போதிய அளவு அப் பிராணவாயு அகப்படுவதற்கு ஏதுவில்லாததால் நிலத்திற்கு களைப்பும், அதிக வேலையும் ஏற்படுகிறது. எப்போது நிலம் களைத்துப் போயிற்றோ அப்போது அதனால் சரியானபடி வேலை செய்ய சக்தியற்றுப் போய் விடுகிறது. ஆகையால் பயிர்களின் தொழிலை இரண்டுவிதமாகப் பிரித்து அவ்விரண்டு வேலைகளையும் தனித்தனியான இரண்டு இடங்களில் செய்வது அவசியமாகிறது. முதல் வேலை என்னவெனில் எருக்களை பயிர்கள் உடனே உபயோகிக்கக் கூடிய சமைந்த உணவாக்குவது. இந்த வேலை வயலில் செய்யப்படாமல் வெளியிலேயே செய்யப்படுவது அவசியம். இரண்டாவது வேலை பயிரின் வளர்ச்சிக்கு நிலம் உதவுவது. இவ்வேலை தான் நியாயமாய் நிலங்களுக்கு ஏற்பட்ட வேலைகளேயன்றி பயிருணவை சமைக்கும் வேலை நிலங்களுக் கேற்பட்டதல்ல. இவ்வாறு இரண்டு பிரிவுகளாக்குவதுதான் சிலாக்கியமான முறையென்று சீனதேசத்தார்தான் அவர்களுடைய ஆழ்ந்த அறிவாலும், அரிய அநுபோகத்தாலும் கண்டு பிடித்தார்கள். கான்பூரிலும் நாக்பூரிலும் அதிக சிரமம் எடுத்துக் கொண்டு இச்செயற்கைத் தொழு எருக்களை செத்தைகளிலிருந்தும் குப்பை கூளங்களிலிருந்தும் சேகரித்து வருகிறார்கள். வங்காள இராஜதானியிலும், யூனெட் பிராவின்ஸ்களிலும் வாடர் ஹயசின்த் (பிசாசு தாமரை) அமோகமான களைப்பூண்டாகி அபரிமிதமான சேதம் விளைவித்து வந்ததென்று நீங்கள் வாசித்திருப்பீர்கள்.

தற்காலம் சாக்கடைத் தண்ணீரிலிருந்து எடுக்கும் கழிவுப் பொருள் (Sledge) காஸ் இஞ்ஜின்களுக்கு உபயோகிக்கப்படுகிறது. இக் கழிவுப் பொருட்கள் பயிர்களுக்கு சிறந்த பயிருணவுகளாக மாற்றப்படலாம். இதற்குப் பதிலாக காஸ் இஞ்ஜின்களுக்கு வாடர் ஹயசின்த் (பிசாசு தாமரையை) ஏன் அழுகவைத்து (காசாக) ஓர் வித வாயு ருபமாய் மாற்றி இயந்திர சக்தி உண்டாக்கக் கூடாதென்று எனக்குத் தோற்றவில்லை.

ஆளிவிதை, ஓட்ஸ், தானியக் கதிர்கள், கோதுப் பயிர்கள், தக்காளி முதலியவைகளின் கழிவுப் பொருட்களை செயற்கைத் தொழுவெருவாக மாற்றுவதில் இப்போது பரீட்சைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு ரஸ்தாக்களிலும் உதிர்ந்து கிடக்கும் இலைச்சருகுகள் எவ்வளவென்றும், அவைகளை சேர்த்துத் தொழுவெருவாக மாற்றினால் எத்தனை ஆயிரம் வண்டிகள் எரு கிடைக்கக்கூடுமென்பதையும் கவனியுங்கள்.

இனி பட்டணங்களிலும் நகரங்களிலும் அவம்போகும் கழிவுப் பொருட்களை எடுத்துச் சொல்லுகிறேன். பிரதிபட்டணத்திலும் நித்யம் தூற்றிப் பெருக்கிக் கொண்டுபோகும் குப்பைகள் எத்தனை வண்டி பாரங்களென்றும் பாருங்கள். மக்கள் மலமும் எத்தனை வண்டிகள் நித்யம் அப்புறப்படுத்தப் படுகின்றனவென்று உங்களுக்குத் தெரியுமா?

நாற்பதாயிரம் ஜனத்தொகை கொண்ட நாசிக் என்ற சிறு பட்டணத்தில் மட்டும் நித்யம் 85 வண்டி பாரம் பெருக்கும் குப்பைகள் சேருகிறதென்றால் பெரிய பட்டணங்களில் எவ்வளவு சேருமென்பதை நீங்களே யோசித்துக் கொள்ளக்கூடும். எனக்குத் தோற்றுவதென்னவென்றால் இக்குப்பைகளைக் கொண்டுபோய் ஜலம்வித்து கக்குஸ்ஸெருவுடனும், சாக்கடைக் கழிவுகளுடனும் குழிகளில்போட்டுமக்கும்படி செய்தால் எத்தனை ஆயிரம் வண்டி எருச் சேகரிக்கலாமென்று கவனியுங்கள். [விபவ வருஷம் பங்குனி மாதம் 1929 மார்ச்சு கிருஷிகனில் இம்முறையை விவரித்திருக்கிறோம். ப-ர்-]

தற்காலத்தில் சாக்கடைத் தண்ணீரானது இந்தியாவில் அநேகமாய் வியர்த்தமாய் செலவழிக்கப்படுகிறது. வீணில அவம் போனாலும் அக்கறையில்லை. அதன் மூலமாய் உற்பத்தியாகும் வியாதிகளுக்கும் கணக்குண்டோ? நான் சொன்ன பிரகாரம் ஷை சாக்கடைத் தண்ணீரை எருவாக்கி உபயோகப்படுத்தப்பட்டால் பயிர்களுக்கு ஜீவாதாரமான சத்துள்ள எருக்களை சேகரம் செய்வதோடு, பல தொத்து வியாதிகளையும் தடுக்க ஹேதுவுண்டாகிறது. இனியாவது இப்பரோபகாரமான வேலையை நாமெல்லோரும் கையாடுகிறோமோ எனப்பார்ப்போம்.

இச் சந்தர்ப்பத்தை யொட்டி மஹாத்மா காந்தியடிகளின் அருமை மொழியொன்றை இங்கு எடுத்துக் கூற விரும்புகிறேன். அது என்னவெனில் இந்தியர்கள் ஒவ்வொருவர் சம்பந்தப்பட்ட மட்டில் சுத்தமானவர்களே- ஆனால் சமூகமாகச் சேர்ந்து சுத்தமானவர்களல்லவென்று சொல்லுகிறார்கள். ஒவ்வொரு இந்தியப் பட்டணங்களைச் சுற்றிப்பார்க்கும் ஒவ்வொருவரும் மஹாத்மா காந்தியடிகளின்

அரிய மொழிகளை ஒப்புக்கொண்டே தீரவேண்டி யிருக்கிறது. ஏனெனில் சமதுபட்டணங்களெல்லாம், சுகாதாரமில்லாமலும், அசுத்தமாயும் சாக்கடைகள் பெருக்கப் பெற்றும், எங்கு பார்த்தாலும் மலஜலம் கழியப்பட்டும் இருப்பதால் வியாதிகளுக்குத் தாய்வீடா யிருக்கிறதென்பதை எவராலாவது மறுக்கக் கூடுமோ? இதுவரையில் இவைகளை நிவர்த்திப்பதற்கு ஏற்ற வழிகள் தெரியாமல் அதிக கஷ்டத்திற்குள்ளானது உண்மையாயினும், தற்கால சாஸ்திர ரீதியாய் கண்டுபிடிக்கப்பட்ட மார்க்கங்களின் மூலமாய் இக்குப்பைகளும், கசுநுஸ்களும், சாக்கடைக் கழிவுப் பதார்த்தங்களும், சீக்கிரமாகவே விலையுள்ளதும், அசுத்தமில்லாததும், துர்நாற்றம் விசாததுமான சிறந்த எருக்களாக மாற்றக்கூடும். கவர்ன்மெண்டார் இவ்விஷயத்தை ஆராய்ச்சி செய்வதற்கு ஒரு உத்யோகஸ்தரை நியமித்து ஒவ்வொரு இராஜதானியிலும் இப்பேர்ப்பட்ட கழிவுப் பொருட்கள் எவ்வளவு அகப்பட ஹேதுவுண்டு என்று கணக்கெடுத்துப் பார்த்தால் அதன் மூலமாய் அமோக இலாபம் பெற ஹேதுவிருக்கிறது. பம்பாய் இராஜதானியில் இவ்வித வேலை ஆரம்பித்து விட்டார்கள். இந்த விவசாய காலேஜில் வாசிக்கும் ஒவ்வொருமாணவனும்இப்பேர்ப்பட்ட உபகாரமான முறைகள் தங்கள் தங்கள் ஊர்களிலும், சமீபங்களிலுள்ள பல ஊர்களிலும் பரவச் செய்து ஜனங்கள் மனதில் பதியும்வாறு போதனை செய்தால் அதன் மூலமாய் எவ்வளவு அநுகூலம் அடையலாமென்று சற்று சிந்தியுங்கள். இந்தூர் சமஸ்தானமும், கர்னலும் உங்களுக்கு வழிகாட்டி நிற்கின்றது. இனி பின்பற்றிநடப்பதுதான் உங்கள் வேலை.

உங்கள் மோட்டார் வான்களிலமைத்திருக்கும் விவசாயக் காட்சியால் ஏற்படும் நன்மையைக் கவனியுங்கள்.

நீங்கள் சந்தோஷமாயும், உற்சாகத்தோடும், உள்ளன்புடனும், அநுதாபத்தோடும் சமத்துவத்துடனும் கிருஷிகரிடம் பேசுவீர்களாகில் அவர்களின் மூலமாய் நீங்கள் பல வேலைகளை சித்திபெறும்படி செய்யக்கூடுமென்பதில் கிஞ்சிற்றேனும் சந்தேகமில்லை. பேசும் காலம் சென்றுவிட்டது. உங்கள் உண்மையான திறமையையும் உங்களுக்கு கிருஷிகரிடமிருக்கும் உண்மை அநுதாபத்தையும் இனி நீங்கள் செய்துமுடிக்கும் காரியத்தால்தான் மற்றவர்களுக்குக் காட்டவேண்டும்'' என்று சொல்லி முடித்தார்.

# IMPERIAL AGRICULTURAL RESEARCH INSTITUTE

## இம்பீரில் விவசாய ஆராய்ச்சி நிர்வாக சபை.

சென்ற சஞ்சிகையில் நாம் தெரிவித்தபடி இந்திய கவர்ன்மெண்டார் செய்த தீர்மானங்களை செக்ரடரி ஆப்ஸ்டேட் பார் இந்தியா முதலில் ஆமோதிக்காவிட்டாலும் கடைசியில அங்கீகரித்து விட்டார். ஆகையால் இந்திய கவர்ண்மெண்டார் இப்பொழுது மத்திய நிர்வாக சபையை நியமிக்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். அச்சபை ராயல் கமிஷனால் சிபார்சு செய்த பிரகாரம இல்லாமல் இந்தியன் சொசைட்டீஸ் ஆக்ட் விதிகளின்படி ரிஜிஸ்டர் செய்த ஒரு ஆராய்ச்சி நிர்வாக சபையாக கூட்டத் தீர்மானித்துள்ளார்கள். ஷை நிர்வாக சபையை ரிஜிஸ்டர் செய்ய சென்ற ஜுன்மீ 21௳ சிம்லாவில் ஷை கூட்டத்தார் சட்ட திட்டங்களையும், மெமொராண்டம் ஆப் அஸோஸியேஷனும் தீர்மானிக்கும் பொருட்டு கூடினார்கள்.

ஷை சபையின் கவர்னிங்பாடியில் அடியிற்கண்டபடி கவுன்சில் ஆப்ஸ்டேட் மெம்பர் ஒருவர், இந்தியா சட்ட சபையிலிருந்து இரண்டு மெம்பர்கள், இந்தியன் வியாபார சங்கத்திலிருந்து ஒரு மெம்பர், ஐரோப்பிய வியாபார சங்கத்திலிருந்து ஒரு மெம்பர், மாகாணம் ஒன்றுக்கு ஒவ்வொரு மெம்பராக ஒன்பது பெரிய மாகாண சட்டசபைகளிலிருந்து ஒன்பது மெம்பர்களும் இருப்பார்கள். இந்த ஒன்பது மெம்பர்களும் அந்தந்த மாகாண விவசாய மந்திரிகளாக இருப்பார்கள் என்று தெரிய வருகிறது. இந்தியா கவர்ண்மெண்ட் விவசாய மெம்பர் இந்த நிர்வாக சபைக்கு அக்கிராசனாதிபதியாக இருப்பார். இதன்றி ஒரு விவசாய நிபுணர் ஸ்திரமாக இச்சபைக் கிறம்கை ஏற்படுத்தப்படுவார். அந்த உத்தியோகம் விவசாய ராயல் கமிஷனில் மெம்பராக இருந்து வரும் ஸர் தாமஸ் மிடில்டன் என்பவருக்கு கொடுக்கப்படுமென்று தெரிய வருகிறது.

ஷை நிர்வாக சபையின் அட்வைசரி பாடியில் எல்லா மாகாண விவசாய டைரெக்டர்களும், மிருக சிகிச்சை டிபார்ட்மெண்டு உத்தியோகஸ்தர்களும், யூனிவர்சிட்டிகளிலிருந்தும் பொது ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சிலரும், ஐக்கிய நாணய சங்க அபிவிருத்தியில் உழைத்து வரும் ஒருவரும் சேர்ந்து ஏறக்குறைய ஐம்பது மெம்பர்கள் இருப்பார்கள். விவசாய ராயல் கமிஷன் முக்கியமாய் சிபார்சு செய்த பிரகாரம் நிர்வாக சபையின் வேலையானது நடத்தப்படும்.

# MADRAS AGRICULTURAL DEPARTMENT REORGANISATION

## சென்னை விவசாய இலாகாவில் சில மாறுதல்களும் சீர்திருத்தங்களும்

விவசாய இலாகா டிப்டி டைரெக்டர் மிஸ்டர் மன்ரோ அவர்கள் விவசாய இலாகா அபிவிருத்தி விஷயமாய் ஸ்பெஷல் வேலையிலிருந்து எழுதிய ரிப்போர்ட்டிலிருந்து சென்னை கவர்ன்மெண்டுக்கு விவசாய டைரெக்டர் அவர்கள் அனுப்பிய ரிப்போர்ட்டின் பேரில் கவர்ன்மெண்டார் சில சீர்திருத்தங்களைப்பற்றியும், சில மாறுதல்களைப் பற்றியும் உத்திரவு பிறப்பித்திருக்கிறார்கள்.

அந்த ரிப்போர்ட்டில் விவசாய டைரெக்டர் விவசாய ராயல் கமிஷனல் சிபார்சு செய்தபிரகாரம் இலாகாவின் எல்லாபிரிவுகளிலும் எல்லா வேலைகளையும் ஒன்றுபடச் செய்து ஒரு ஸ்தானத்திற்கு கொண்டுவந்து அதற்கு பிறகு செய்ய வேண்டிய அபிவிருத்திகளெல்லாம் மேல் சொன்ன ஸ்தானத்திலிருந்தே அநேக வருஷங்களில் ஒரேகிரமமாய்ச் செய்ய பிறயத்தனப்பட்டு வருவதாகவும், விவசாய டைரெக்டர் சிபார்சு செய்தபிரகாரம் சில சீர்திருத்தங்களையும், மாறுதல்களையும் இவ்வருஷத்திற்கு முக்கியமாக வேண்டியவர்களை கவர்ன்மெண்டார் ஆமோதித்து சாங்ஷன் செய்திருப்பதாகவும் இதற்குப்பிந்திய வருஷங்களுக்கு முக்கியமாக வேண்டியவைகளுக்கு விவசாய டைரெக்டர் அவர்களை பட்ஜட்டில் இரண்டாவது பிரிவில் அனுப்பும்படிக்கும் உத்திரவு பிறப்பித்திருக்கிறார்கள்.

### சர்க்கிள் சீர்திருத்தங்கள்

இப்பொழுது இந்த இராஜதானியானது 8 சர்க்கிள்களாக பிரிக்கப்பட்டிருக்கிறது. விவசாய டைரெக்டர் நீலகிரியில் ஒரு புது சர்க்கிளும், தெலுங்கு பாகத்தில் மற்றொரு புது சர்க்கிளும ஸ்தாபிக்க சிபார்சு செய்தார். ஏனெனில் நீலகிரியில் இருக்கும் தோதவர்கள் படகர்கள் இவர்களின் விவசாய சம்பந்தமான முன்னேற்றத்தைக் குறித்து அதிகவேலை செய்யவெண்டிய திருக்கிறது. ஆனால் மேற்படி ஜில்லாவிலிருக்கும் வேலைகளை கவனிக்கு மிடத்து தனி சர்க்கிளாக ஏற்படுத்த முடியாதென்றும், அந்த ஜில்லாவிலுள்ள வேலைகள் அதிகப்பட்டால் டிஸ்டிரிக்ட்வேலையைத்தனியாகப் பிரித்து அதற்கு ஒரு அஸிஸ்டண்டு டைரெக்டரை நியமனஞ் செய்ய யோசிக்க வேண்டுமென்றும், தெலுங்கு பாகத்திற்கு மற்றொரு புதிய சர்க்கிள் இவ்வருஷத்தில் ஏற்படுத்த எழுதியனுப்பும்படிக்கும் உத்தரவு பிறத்திருக்கிறார்கள்.

இப்பொழுது ஒவ்வொரு சர்க்கிளுக்கும் ஒவ்வொரு டிப்டி டைரெக்டரும் இருந்து வருவதால், டிப்டி டைரெக்டரால் வேலை அபிவிருத்தி விஷயத்திலும், மேல்பார்த்தல் விஷயத்திலும், சரிவரக் கவனித்து வர முடியவில்லை. ஆகையால் ஒவ்வொரு அஸிஸ்டெண்டு டைரெக்டர் வசம் கொடுத்து அவர்களுக்கு "ஜில்லா விவசாய உத்தியோகஸ்தர்" என்று பெயர் கொடுத்து அவர்களையே விவசாய வேலைகளை மேல்பார்த்து வர வேண்டுமென்றும், சர்க்கிள் விவசாய டிப்டி டைரெக்டர்கள் இவர்களுடைய வேலையை மேல்பார்த்து வரவேண்டுமென்றும், அப்படி ஏற்பாடு செய்வதால் அதிகமாக 18 உத்தியோகஸ்தர்கள் வேண்டுமென்றும், அதை 10 வருஷங்களில் சாங்க்ஷன் செய்ய வேண்டுமென்றும் விவசாய டைரெக்டர் சிபார்சு செய்துள்ளார். அதன் பிரகாரம் இவ்வருஷத்திற்கு ரூ 250-25-750 சம்பளத்தில் 4 உத்தியோகஸ்தர்களை 1-5-29 முதல் கவர்ன்மெண்டில் சாங்க்ஷன் செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய குமஸ்தா முதலியவர்களையும் சாங்க்ஷன் செய்திருக்கிறார்கள்

## தாலுகா வேலைகள்

ஒவ்வொரு ஜில்லாவிலும் உள்ள ஒவ்வொரு தாலுகாவிற்கும் விவசாயிகளுக்கு தக்க சமயத்தில் உதவி செய்யவும் மற்ற விவசாய வேலைகளை கவனிக்கவும் ஒரு விவசாய டிமான்ஸ்டிரேட்டர் இருக்க வேண்டுமென்பது விவசாய இலாகாவின் நோக்கம். இம்மாதிரி இன்னும் 10 வருஷத்திற்குள் கொண்டு வருவதற்கு விவசாய டைரெக்டர் தீர்மானித்துள்ளார். இந்த டிமான்ஸ்டிரேட்டார்கள் பயிர் அபிவிருத்தி நிபுணர்களால் கண்டு பிடிக்கப்பட்ட புதுமாதிரி விதைகளை விவசாயிகளுக்குக் கொடுத்துவர விதைப்பண்ணைகளை நடத்தவேண்டுமென்றும், இவ்வேலையை அதிகமாக விதைகள் கொடுத்து வரும் இடங்களில் அவர்களுடைய இதர வேலைகளுடன் சேர்த்துப் பார்க்க முடியாதென்றும் பருத்தி விதைகள் விற்றுவரும் 3, 6, 8 சர்க்கிள்களுக்கும் நெல்விதை விற்றுவரும் 5வது சர்க்கிளுக்கும், சர்க்கிள் ஒன்றுக்கு இரண்டு டிமான்ஸ்டிரேட்டர்கள் சாங்க்ஷன் செய்யும்படி விவசாய டைரெக்டர் சிபார்சு செய்துள்ளார். கவர்ன்மெண்டார் ரூ 85-5-120 சம்பளத்தில் அப்பர் சபார்டினேட் கிரேடில் 8 டிமான்ஸ்டிரேட்டர்களை புதிதாய் நியமிக்கும்படி சாங்க்ஷன் செய்திருக்கிறார்கள், அவர்களுக்கு உதவிபுரிய ரூ 15—1—20 சம்பளத்தில் ஒரு வருஷத்திற்கு டெம்பரரியாக 15 மேஸ்திரிகளையும் சாங்க்ஷன் செய்திருக்கிறார்கள்.

## பரிசீலனை

பரிசீலனை உத்தியோகஸ்தர்களின் இதர வேலைகளை எடுத்து காலேஜி பிரின்ஸிபால் அவர்களின் கீழ் ஒரு மத்திய ஆபீஸ் ஸ்தாபித்து அதற்குக் கொடுத்துவிட உத்திரவாயிருக்கிறது, மேற்படி பரிசிலனை உத்தியோகஸ்தர்களின் கீழிருந்துவந்த விவசாயப் பண்ணைகளை அந்தந்த சர்க்கிள் டிப்டி டைரெக்டர் அவர்களுக்குக் கொடுக்க உத்தரவாயிருக்கிறது. இதனால் உண்டாகும் அதிக வேலையை கவனிக்க பிரின்ஸிபாலுக்குதவியாக ரூ 250—25—350 ல் 1. 4. 29 முதல் ஒரு உத்தியோகஸ்தனையும் சாங்க்ஷன செய்து, விவசாய டைரெக்டர் ரிபார்ட் செய்தபடி, பரிசீலனை உத்யோகஸ்தர்களின் கீழ் வேலை பார்த்துவரும் குமஸ்தாக்களையும், சேவகர்களையும், பிரின்ஸிபால் ஆபீசுக்கு மாற்றிவிடவும் கவர்ண்மெண்டார் உத்திரவிட்டிருக்கிறார்கள்.

விவசாய டைரெக்டர் அவர்களின் ரிப்போர்ட்டுப்படி இதுவரையிலும் சரியாக பரிசீலனை செய்யப்படாத எண்ணெய் விதைகளை பரிசீலனை செய்ய ரூ 350—50—1250 சம்பளத்தில் ஒரு உத்தியோகஸ்தரை நியமிக்க செக்ரடரி ஆப்ஸ்டேட் பார் இந்தியா அவர்களிடம் சாங்க்ஷன் வாங்கும்படி இந்திய கவர்ன்மெண்டாரை கேட்கப்பட்டிருக்கிறது.

மில்லெட் ஸ்பெஷலிஸ்ட் அவர்களின கீழ் அதோனி விவசாய பண்ணையில் வேலைசெய்ய ஒரு உத்யோகஸ்தரை மேற்படி பண்ணை திறந்தவுடன் சாங்க்ஷன் செய்வதாக கவர்ண்மெண்டார் உத்திரவு செய்திருக்கிறார்கள்

ரூ 250-25-750 சம்பளத்தில் 1—5—29 முதல ஒரு உதவி பூச்சி சாஸ்திரியையும் அவருக்கு வேண்டிய கீழ் உத்தியோகஸ்தர்களையும் கவர்ண்மெண்டார் சாங்க்ஷன் செய்திருக்கிறார்கள்.

விவசாய டைரெக்டர் அவர்கள் கேட்டுக்கொண்டபடி 1-5-29 முதல் காலேஜ் புஸ்தகசாலையை கவனிக்க ஒரு அப்பர்சபார்டினேட்டும் சாங்க்ஷன் செய்யப்பட்டிருக்கிறார்.

விவசாய டைரெக்டருக்கு சென்னையில் உதவிசெய்ய ஒரு டிப்டி டைரெக்டர் ரூ350—50—1250 சம்பளத்தோடு ரூ 100 ஸ்பெஷல் சம்பளமும், ரூ 150 பிரஸிடென்ஸி அலவன்சும் கொடுத்து நியமிக்க இந்தியன் செக்ரடரி ஆப்ஸ்டேட் அவர்களுக்கு கவர்ன்மெண்டில் எழுதியுள்ளார்கள்.

இப்பொழுது கால்நடை அபிவிருத்தி சாலையின் வேலையைப் பார்த்துவரும் டிப்டி டைரெக்டரை கால்நடை சம்மந்தமான ரசாயன பரிசோதனைக்கு அனுப்பவும், அவருக்கு பதில் ஒருகால் நடை அபிவிருத்தி உத்தியோகஸ்தரை நியமிக்கும்படிக்கும் கவர்ணமெண்டார் 1931-32ல் சாங்க்ஷன் செய்வதாக உத்திரவு செய்திருக்கிறார்கள்.

# Clearance of doubt in correspondence.

Continued from Page 65 of Vol XII No 3

## கடிதவினு சந்தேகமாற்று

(கிருஷிகன் 12ம் வால்யம் 3ம் நம்பர் 65ம் பக்கத் தொடர்ச்சி)

3. அபார லாபந்தரும் புளிவிரை பயனிரா கிருஷிகன் 12ம் வாலம் 23ம் பக்கம் அபார லாபந்தரும் புளிவிரை தேவையென்று ஸ்ரீமான் டி. முத்து கிருஷ்ணரென்ற நிருப நேயர் கேட்கிறார்.

மா, கன்போடுவது தாய்ச்சாதி போலிராதென்று ஒட்டு கட்டுமுறை யேற்பட்டது. அதற்குமாறாக புளிவிரை போடுவது தாய்ச்சாதி போலிருக்கும். காய்ப்புங் குறைவிராதென்று கருதுவதமிசரு, விரையால் மட்டுங் காய்ப்பதிகப்படமாட்டாது. புளிகாய்ப்பது நிலஸ்திதியைப் பொருத்ததாகும். மேல் மண் செவ்வலாயும் அடிப்பாகம் சுக்கான் சான்கல்லிருக்கில் சிரேஷ்டமான சாதியாவதோடு காய்ப்புங் குறையமாட்டாது அதற்கடுத்தபடி அடிப்பாகம் செஞ்சரள் இளக்கமானதா யிருக்கலாம். மற்ற நிலங்களில் விசேஷ காய்ப்பிருக்காது. நிருபநேயர் வசிக்கும் கும்பகோணம் தாலூகா வண்டல் பிரதேசத்தில் மரம் வளமாயுண்டாகும். நேரே காய்க்க மாட்டாது. பட்டுக்கோட்டை தாலூகா செவ்வல் நிலத்தில் சரியான காய்ப்புண்டாகும். மேலும் புளிவிர்த்தி செய்வோர் 100க்கு 60-70 பங்கு புளிசதையும் 30—40 பங்கு விரையிருப்பது புளி நிறை குறைபாக காய்ப்பாகும். விசேஷமாய் புளி காய்க்கும் பிரதேசஞ்சென்று சாந்தி காய்க்கும் புளியமரத்தடி மண்ணை வெட்டி பரிசீலனை பண்ணி சோதனை செய்யின் சுக்கான் சாருள்ள நிலமாகவே யிருக்கும்.

4 ஸ்ரீமான் டி. வி. சண்முகம் பிள்ளை நிருபத்துக்கு விடைகள்.

கிருஷிகன் 11ம் வாலம் 241ம் பக்கம் பின்வரும் வினாக்களுக்கு நண்பர் விடை விரும்புகிறார்.

1 செழிப்பா யுண்டாகாத எலுமிச்சை விருத்தி முறை யெவை என்கிறார். மிளகாய்செடி கருவளிபயிர் போன்று வாரத்தில் 2தபா ஜலம் பாய்ச்சல் 3 வாரத்துக்கோர் தபா நிலங்கிளரிவிடல் வருடத்தில் 2தபா உரம் வைத்தலான பருவந் தவறாமல் செய்துவரின் செடி வளமாயுண்டாகி காய்ப்பதிகமாகும், பருவந்தாழ்விருந்தால் நேரே காய்க்கா. செவ்வல் கடுஞ்செவ்வல், இருக்கமானமண், களிமண், களர், ஓட்டம் பிடித்தமண், என பல தினுசுண்டு. அதில் இன்ன தினுசு மண் சேர்ந்தது, அடிமண் தன்மை எவை என்று அறிவித்தால் வேண்டுஞ் சாதனங் கூறலாம்.

2 செழிப்பான மா, பிலா, காயாததென்ன? நிலம் செவ்வானை மண் வண்டல் மண் முதலியதில் நேரே காயாது. சாளிருந்தாலும் ரொம்ப ஆழத்திலிருக்கலாம் அல்லது இளக்கஞ் சாஸ்தியான சாளாயிருக்கலாம். ஒவ்

வேர் மரத்தூரிலிருந்து 3 கஜத்துக்கப்பால் சல்லி வேரிருப்பதரிந்து ஒன்ற
றை இஞ்சு குருக்களவு அகல சமர்மாஞ் சுற்றி 10—20 குளி ஒன்றரையடி
ஆழங்குழி போடவும், அதில் 20பவுண்டு எலும்புத்தூள் 40 பவுண்டு அடுப்பு
சாம்பல் 10 பவுண்டு சோத்துக்கு போடும் கரியுப்பு, வேண்டிய மணலுஞ்
சேர்த்துக் கலந்து குளிகள் சவறாமல் புரட்டாசி மாதமாசரில் போட்டு
மண் போட்டு குளிரொப்பவும். இலைபுதிர்ந்து கார்த்திகை மார்கழி புஷ்பித்து
காய்க்கும். இளமரத்தில் ஒட்டுமரம் என்று தெரியின் பத்து வருடமான பின்
பேகாய்க்கச் செய்ய வேண்டும். முக்துமுன் காய்க்க விடக்கூடாது. இளமர
த்தில் ஒட்டுகட்டிய கண் தழை மலிர்த்து மோதியுண்டாகவே செய்யும். கா
யாத முதுமரங்களுக்கு அடிதண்டிலிருந்து கிளை பிரியுமவர் தோறும் கவரி
லிருந்து 1 அடிக்கு மேல் கிளை கனம் பாதி போம்படி நச்சனுபயோகிக்கும்
அறை இஞ்சு அகல ஆக்கரிஹல் தமரிடவும். சமர்தோறும் 2—3 டிரும் பாத
ரசஞ் செலுத்தி மரமுளையடிக்கவும். இதுவும் புரட்டாசி மாதமே செய்ய வே
ண்டும், முத்தாத மரத்துக்கு ரசம் பாய்ச்சப்படாது, நடுவயதுமரத்துக்குப
யோகிக்கலாம். காய்ப்புக் கெத்தனமாய்விடும். காயாத காரணம் பலவிருக்
கின்றன மிகபெருகி விடுமென்று குன்றக் கூறினோம், ஐயமேதேனுமுளதென்
றறிவித்தால் விடைகூற ஆட்சேபமின்று. முத்தியமட்டை கருப்பு இளமரப்
பட்டை — சாம்பல் நிறமடையாத வெளுத்த பழுப்பாயிருக்கும்.

3 காய்க்கும் தென்னைக்குரமிடுவதெவ்வாறு? மரத்தூரிலிருந்து 5 அடி
க்கப்பால் ஒன்றரை அடி ஆழம் 1 அடி அகலம் ஒவ்வோர் மரம் சுற்றி பூரு
கால்வெட்டி மண் வெளியே குவிக்கவும். வெட்டிய கால் ஒருமாதம் காற்றார
விடுவது நலம், கால்களில் அமைந்த உரம் போட்டு வெட்டி குவித்த மண்
ணால் நிரத்தி ஜலம் பாய்ச்சவும். மரத்தடியில் மண் தோண்டுவது மரத்துக்
கூனம் சம்பவிக்கும். வெட்டிய மண் உரையுமுன் காற்று பாதையால் மரஞ்
சாயவுங்கூடும். தென்னை முளைவேர் 5 அடிக்கப்பாலிருக்கும்: சல்லிவேரே
மாவுணவை கிரகிக்கச்செய்வது அவசியம்: முளைவேரில் உரமிடுவது சரியான கா
ய்ப்பாகும். உரமிட்ட தென்னை காய்ப்பு ஜாஸ்தி, வெட்டு கொத்தல் உரமிடா
தது காய்ப்பு மோசமாய் விடும்.

4 வேலிகட்டி நிலமாழுமுறை என்ன?

இலுமிச்சு மாகளை வேலிப்பக்கம் போடலாமா வென்று விரும்பியுள்
ளார். முன்னமே பல ஜாதி மரமிருக்கும்போது பின்னும் விருட்சம் போ
டுவது மரநிழலில் வேறு மரமுண்டாகாது. ரோட்டு மரம் நெருக்கமா யிரு
ப்பது நிழலுக்காக வேம்பட்டது, காய்க்க வேண்டிய மரங்கள் கலப்பாக
வில்லாதவரை காய்க்கவே மாட்டாது. காயுள்ள மரங்கள் வைப்பது காய்க்
கவா? நிழலடி பசுஞ்சோலை காட்சியா யிருந்து பலனடையாதிருக்கவா வென்
பதை நிருப நேயர் சிந்திக்குமாறு வேண்டுகிறோம். விவசாயி விரும்படி
கஷ்டமின்றி ஜாஸ்தி பலன்தரு மரமெதென்றறிந்து காய்ப்புக்கு லாயக்கில்

லர் மரத்தை வெட்டி யழிக்க வேண்டும். மரம் வெட்டலாமாவென யோசனைசெய்து காலந்தள்ளப்படாது, சிலநிலம் மா காய்ப்பு ஜாஸ்தி, சில நிலம் பிலா காய்ப்பதிகம். சில புன்னை இலுப்பை காய்ப்பு ஜாஸ்தி. சில நிலம் புளி காய்க்கும், சில நிலம் தென்னை காய்க்கும். எந்த நிலத்தில் எந்த மரம் ஜாஸ்தி வரும்படி கொடுக்குமோ அதை நிறுத்தி மற்றதை வெட்டிவிட வேண்டும், புன்னை, மா, பிலா, தென்னை, எல்லாம் ஒன்றோடொன்று சலந்து நெருங்கிபலன் பாழாவதுநியாயமேயன்று. வரும்படி பிரதானமுள்ள மரம் நிறுத்த வேண்டும், காய்க்கக்கூடாத மரம் நிறுத்தப்படாது. மரம்கலப்பிக்கவே. பாக்கி மரம் எதேஷ்டமாய் காய்க்கும்.

வேலி சற்றுளை வேலியாகிவிட வேலியிலிருந்து 2-3 கஜம் தூரத்துக்கப்பால் வேறே உள் பாகமரம் நிற்கலாம், பழுதடையவே மாட்டாது.

கொடுக்காபுளி பூவரசு வாகை முதலிய வேலியானால் மரத்திலிருந்து 5 கஜத்துக்கப்பால் வேலி சுத்துபூருவுமஒன்றரையடி ஆழம் 2 அடி அகலம் கால்வெட்டி விடவேண்டும், வேலிமரவேர் பாதை தோட்ட உள் மரங்களை பாதியாது, வடிகால் வசதியமைத்து தோட்டமரங்களுக்குகாய்ச்சல்பாய்ச்சல் கொடுக்க சிரேஸ்டமான காய்ப்புண்டாகும். வேலிமரம் படர்ந்து தோட்ட மரங்களை பாதிக்கும் கிளைகளை அப்பப்போ கவாத்தாக வேண்டியதவசியமேயாம். கவாத்தாகாத வரை கோட்டத்துள் மரங்காய்க்க மாட்டாது.

கடிதம் வளர்த்து பெருக்குவதா முறை

கிருஷிகன் பதினொன்றாவது வாலம் பதினொன்பதாம் பக்கம் ஈருள்ளி விரையும் கரும்பு விரையும் தேவை என்று ஸ்ரீமான் ஜி சங்கர நாராயணய்யர் வினவியதற்கு விடையழிக்கப்பட்டிருக்கிறது.

ஈருள்ளி விரைவியாபாரியிடம் வாங்குவது மோசம். விவசாயிகள் விரை தயாரிக்கும்படி கிருஷிகன் 11வது வாலம் 64-65ம் பக்கத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது. கரும்புவிரை கடையத்தில் வாங்கலாமென்று ௸ 20—21 பக்கத்தில் தெரிவிக்கப்பட்டது. ஈருள்ளி விரை தயாரிக்கவும் கரும்பு பயிர் விரை வாங்கவும் முயலவேயில்லை. முயற்சியின்றி லெட்டர் கரஸ்பாண்டென்சு செய்வதால் விவசாய பருவம் நிறைவேறவாசெய்யும். முன்கூட்டி சாவகாசமாய் விதை தருவிக்காமலிருந்து விட்டு பருவ காலங்கிட்டவும் விரை தேவை யென்று எழுதினால் கிருஷிகனுபீஸ் ஸ்டோரிலிருந்து வரவா செய்யும்? கிருஷிகனுபீஸ் வியாபாரஸ்தலமா? வேண்டிய சாமான் கேட்டபோது சப்ளை செய்ய முடியுமோ? பின்னும் அதே விரை தேவையென்று கிருஷிகன் 216—11, 246—11, 15—12வது இந்தப் பக்கங்களில் வினா விடை கூறப்பட்டுள்ளது. ஒரே விஷயந்திரும்பத் திரும்பவினாவுவதுநியாயமாகுமா? சலிப்புதானில்லையோ! ஒரே சந்தாதார் நிருபமே பிரசுரித்து பத்திரிகை யிடங்கலந்தால் மற்றும்பல சந்தாதார் வேண்டிய விஷயந் தெரிவிக்க இடமெங்கே? பத்திரிகை எல்லா சந்தாதாருக்கும் பொது பத்திரி

முண்டு. அந்த சுதந்தரத்தடைப்படுத்துவது நியாயமன்று. ஒரேதபா விளை விடையிருத்த பின் திரும்பவும் ஆவலாய விரும்புவது பிசகு. கிடைத்த விடையை ஆராய்ச்சி செய்து சாதிப்பது மேலாகும்,

நிருப நேயர் வாசம் திருவனந்தபுரத்திலும் நிலங்கள் செங்கோட்டையி லுமிருப்பதில் காரியஸ்தாள் சரியாய் பருவம் நடத்துவதாயில்லை. நிருபநே யர் ஆர்டர் வரும்போது நாடகம் புனைந்து காரியஸ்தான் பதிலெழுதுகிருர் கள். அதை நம்பி நிருபநேயர் முன்பின் தகவல் பாருமல் எழுதுகிருர் என்று எண்ண வேண்டியதிருக்கிறது.

நிருப நேயர் நிலவருமானம் 5 வருடக் கணக்கிட்டு தேரும் சராசரி வரும்படி தொகைக்கிசாஸ்திவரும்படி செய்யின்லாபத்தில் ஒரு பகுதி காரியஸ் தருக்கு கொடுப்பதாக திட்டஞ் செய்து கொடுத்துவரின் விவசாய பருவம் சரியாய் நிறைவேறும்- நஷ்டமேற்பட மாட்டா. ஜாவா சர்க்கரை செய்யுங் கம்பெனியார் ரசாயன சாஸ்திரி, தாவர சாஸ்திரி, இஞ்சினீர், ஆலை மானே ஜர் முதலியவர்களுக்கு லாபத்தில் சில பகுதி கொடுக்கவும் கம்பெனி தக்க வரும்படி யடைகிறது-

பிரஸ்தாப நிருபர் போன்று வேறே நிருப நேயர்களும் விஷயத்தை திரும்பவும்வரைவது வருந்துதற்குரியது வினவுவதவசியமா, வினவாமல் இரு த்தமுடியாவென்றுதீர்க்காலோசனை செய்தெழுத வேண்டுகிறோம்-பத்திரி கை இடம் பாழாகும்படி விசுவாசமாய் வினவாதிருப்பது உத்தமோத்த தருமமாகும்

வே. ப. திருமலையப்ப முதலியார்
வெள்க்கால் போஸடு கஸ்பா, திருநெல்வேலி ஜில்லா

## CORRESPONDENCE

### கடிதம்

ஸ்ரீமான் கிருஷிகன் பத்திராதிபர் அவர்களுக்கு,

அன்புள்ள ஐயா,

சென்ற வைகாசிமாத கிருஷிகனில் நீங்கள் சொல்லியிருந்த மாதிரியாக ஒட்டுச்செடிகளை பேர்த்தெடுத்தேன், அவைகளின் வேரண்டை களிமண் கட்டியாகவே கரையாமலிருந்தது. புதுவேர்களும்விடவில்லை. ஆகையால் நீங்கள் சொல்லியபடி குழிகளின்மேல் ஒரு உயரம் கலவை மண்போட்டு ஷை செடிகளின் அடியிலிருந்த களிமண்ணை வேர்களுக்கு காயம்படாமல் அலம்பிவிட்டு ஷை மேடுகளின்பேரில் செடிகளை வைத்து தண்ணீர் கொட் டிக் கொண்டு வருகிறேன். இப்போது அம்மாதிரி பேர்த்து வைத்த செடி களில் மூன்று செடிகள் தவிர மற்ற செடிகளெல்லாம் துளிர்விட்டுக் கொண் டிருக்கிறது.

1. பட்டுப்போன செடிகளில் ஒரு ஒட்டுபச்சரிசி மாங்கன் ஒட்டுக்கு மேல் பூராவும் உலர்ந்துவிட்டது. ஒட்டுக்கு கீழ்பாகத்தில் துளிர் விட்டிருக்கிறது. அந்த துளிரை வளரவிடலாமா? வளரவிட்டால் ஷைபச்சரிசிமாங்காய் காய்க்குமா? எத்தனை வருஷத்தில் காய்க்கும்? அல்லது அந்த துளிரைகிள்ளி எறிந்துவிட்டால் ஒட்டுக்குமேல் உலர்ந்த பாகத்திலாவது அல்லது வேறு ஒட்டு இடத்திலாவது துளிர்விடுமா? பதில் விபரமாய் தெரிவிக்கவேணும்.

2 ஷைபட்டுப்போன செடிகளில் ஒரு ஒட்டு எலுமிச்சை பேர்த்து முன் சொன்னபடி வைத்தபிறகு புதுதுளிர் விட்டது. இப்போது 4-5 நாளாக துளிர்விட்ட இலைகள் வாடிக்கொண்டு வருகிறது. காரணம் தெரியவில்லை. இப்போது அதைப் பேர்த்து வேறுயிடத்தில் வைக்கலாமா?

3. துளிர்விட்ட ஒட்டு மல்கோவா மாங்கன்னை 2-3 நாளைக்கு முன் ஆடு கடித்துவிட்டது. குருத்து துளியையும் இலைகளையும் கடித்துவிட்டது. அதற்கு சிகிச்சை என்ன செய்கிறது.

4. இப்போது ஒட்டு பலாக்கன்றொன்றும் பேரி ஒட்டுக்கன்றொன்றும் தற்சமயம் எனக்குத்தேவையாயிருக்கிறது. வருஷம் பிரதி வருஷம காய்க்கும்படியானதும் நல்ல மாசூல் கிடைக்கக்கூடியதுமான செடிகள் எங்கு அகப்படும்?

5 சேலம் அப்துல்ரஹிமான் சாய்பு நர்சரியில் நல்ல ஜாதி செடிகள் அகப்படுமா? அல்லது பெங்களூர் ஷிடியில் இருக்கும்எம்பெயர் நர்சரியில் அகப்படுமா? எங்கிருந்து வரவழைத்தால் நல்லது.

6 ஒட்டுமாங்கன்றுகளில் எந்தெந்த ஜாதி மாங்கள் வருஷம பிரதி வருஷமும் தவறாமல் நல்ல மாசூல் கொடுக்கும்? எங்குவிலை சரசமாய் அகப்படும்?

7 ரோஜாக்களில் எந்தஜாதி புஷ்பம் அதிகமாகக் கிடைக்கும்? எங்கு அகப்படும்? அவைகளில் ஊதா, மஞ்சள், பச்சை, வெள்ளை வர்ணங்களுள்ள புஷ்பம் புஷ்பிக்கும்படியான ரோஜாசெடிகள் அகப்படுவதாகத்தெரிகிறது. என்தோட்டத்து மண் விவரங்கள் முன்னேதங்களுக்கு எழுதியிருக்கிறேன்: என் தோட்டத்தில்வைத்தால் பலிக்குமா? எந்தமாதிரி குழிகள் வெட்டி எருவு போட்டு வைக்கவேண்டும் என்பதை தெரிவிக்கவேணும்.

தாங்கள் முன்பதிலறிவித்தது நேரில் பார்வையிட்டுச்சொன்னது போல் ரொம்பவும் ஆச்சரியமான பலன் தருவித்தது. தங்களையே அடிக்கடி சிரமப்படுத்த வேண்டியதாயிருக்கிறது, அம்மாதிரியான சக்தி தங்களிடம் நாளுக்கு நாள் அபிவிருத்தியடையும் பொருட்டு ஈஸ்வரன் கிருபை கூர்ந்து தங்களை ரக்ஷிப்பாராக,

டி. ஸ்ரீனிவாச ராகவாச்சாரி
சாண்டூர் திருச்சி ஜில்லா.

பதில்

1. ஒட்டுக்கு மேல் பாகம் முற்றிலும் காய்ந்து போயிருப்பதாக நிருப நேயர் தெரிவிப்பதாலும் ஒட்டுக்குக்கீழிருக்கும் செடி கொட்டைச்செடியாக

லாலும்; அதை வளரவிட்டால் சாதாரண கொட்டைச் செடி வளர்ந்து காய்க்க எத்தனை வருஷங்கள் பிடிக்குமோ அத்தனை வருஷங்கள்தான் பிடிக்கும்! அப்போதும் இன்ன தினுசு காய்தான் காய்க்குமென்றும் காய்ப்பதற்கு முன் சொல்ல எவராலும் ஆகாது! கொட்டை தினுசுகளில் பெரிய தினுசு நார் புளிப்பு முதலியவை யில்லாத சிலாக்யமான தினுசாக இருந்தாலும் இருக்கும். நார், புளிப்பு, மஞ்சள்வாசனையுடன் கலந்த உபயோகமற்ற கோலிபருமனுள்ள சிறுகாயா யிருந்தாலும் இருக்கும். ஒருக்கால் இரண்டு கிளைகளையும் சேர்த்து ஒட்டுகட்டிய பாகத்தில் துளிர் விட்டிருந்தால் அவ்வாறு துளிர் விட்டிருப்பது அடிக்கிளை பாகத்திலா அல்லது மேல் கிளை பாகத்திலா என்று சந்தேகமில்லாமல் தெரிந்து கொள்ள சாத்யமானால் பார்த்து ஒட்டின் பாகத்தில் கட்டப்பட்ட இடத்தில் துளிர் விட்டிருந்தால் அது ஒட்டுச் செடியின் துளிராகவே கொள்ள வேண்டும். அப்படியில்லாது கீழ் செடியின் பாகத்திலாகில் அது கொட்டைச் செடியாகவே கொள்ள வேண்டும். நமது ஜெகந்நாதபாக் தோட்டத்தில் ஒட்டின் மேல்பாகம் கனம் கவர்னர் துரை அவர்களின் தோட்டத்திலுள்ள மான்கள் வந்து கடித்துவிட ஒட்டுகட்டிய இடத்தில் சந்தேகிக்கும்படியாக இரண்டு இடங்களில் துளிர் வந்தது. திட்டமாய்த் தெரிய சாத்யமில்லாமலிருந்ததால் இரண்டு கிளைகளும் வளர்ந்து வந்து காய்த்ததின் பேரில் ஒரு கிளை நாம் ஒட்டுச் செடியாக வைத்த ருமாணி காய்களும், மறொரு பக்கம் வேறு ருசியுள்ளதும் பெரியதும், நார்புளிப்பு இல்லாத கொட்டைஜாதிப்பழங்கள் பழுக்கின்றன. கொட்டைச் செடியின் பழங்கள் நல்ல ஜாதியா யிருக்கவே அந்த பாகத்தை வெட்டிவிட மனமில்லாமல் வருஷா வருஷம் ஒரே செடியில் இரண்டு தினுசு நல்ல பழங்களை மாறுல் எடுத்துக் கொண்டிருக்கிறோம், வருஷா வருஷம் குத்தகைக்கு விடும்போதும் அந்த 2 ஜாதியிலும் குத்தகை பழங்கள் இனமாய் வாங்குகிறோம்.

கொட்டைச் செடியை வளரவிட்டால் பச்சரிசி மாங்காய் காய்க்காது.

ஒட்டுக் கிளை முற்றிலும் காய்ந்து போயிருந்தால் உபகாரப்படாது. ஒட்டுக்குமேல், கிளை ஒடிந்து விழுந்திருந்தால் ஒருககால் ஒட்டுக் கட்டிய இடத்தில் துளிர் வர ஹேதுவுண்டு. இல்லாவிடில் உபகாரமில்லை.

(2) சில சமயங்களில் கிளைகளிலிருக்கும் சத்தை கிரஹித்து கட்ட கிளைகள் துளிர்ப்பதுண்டு, அப்படியாயின் கிளையிலிருக்கும் சத்து குறைவுபட்டவுடன இலைகள் வதங்க ஆரம்பிக்கும். சில சமையங்களில் வெட்டிப் போட்டுக் கிடக்கும் மாத்துண்டுகளில் இவ்வாறு துளிர் விட்டிருப்பதைப் பலர் பார்த்திருக்கலாம். அவையெல்லாம் மரச்சத்தை கிரஹித்து துளிர் விடுவதுதான. அச்சத்து குறைந்தவுடன் துளிர்கள் வதங்க ஆரம்பிக்கும். இப்படியா அல்லது வேறு காரணத்திலா என்று கண்டு பிடிப்பதற்கு செடியின் கிளைகள் பக்கம் ஒருபக்கம் கைவிரலால் மெதுவாய் தோண்டிக்

தோண்டிப் போகவேண்டும். அச்செடியின் 3—4 அங்குலங்களின் கீழ் வரையில் அப்பக்கத்தில் வேர்களேயில்லாமலிருந்தால், அதற்கு அடுத்த பக்கத்திலும் அவ்வளவு ஜாக்கிரதையுடன் தோண்டிப் பார்க்கவேண்டும். அப்பக்கத்திலும் வேர்களில்லாவிட்டால் மூன்றாவது பக்கத்தையும் தோண்டிப் பார்த்து அப்பக்கமும் வேர்களில்லாவிடின் அக்கிளையின் சத்தைக்கொண்டே துளிர்விட்டதென்றும், துளிர்கள் வதக்கம்கொடுக்க ஆரம்பித்து விட்டதால் இனி வளராதென்றும் திட்டமாய் விட்டதால் அதைப் பிடுங்கி எறிந்துவிடலாம்.

எப்பக்கத்திலாவது புதுவேர்களிருந்தால் தண்ணீர் இல்லாமையாலா? அல்லது அதிக ஈரத்தாலா? அல்லது கரையான் முதலான பாதையாலா அவ்வாறு சம்பவித்ததென்று தெரிந்து அதற்கேற்றாற்போல் நிவர்த்திசெய்யவேண்டும்.

வேர்கள் புதுவேர்கள் விட்டிருக்கிறது, சாதாரண ஈரப்பதமாயிருக்கிறது. காய்ச்சலினாலாவது அல்லது அதிக ஈரத்தாலாவது, கரையானாலாவது அவ்வாறு சம்பவிக்கவில்லையென்று தெரிந்தால், ஆடுகளாலாவது, மாடுகளாலாவது, காற்றினாலாவது அசைக்கப்பட்டதால் அவ்வாறு வதக்கம் கொடுத்திருக்கிறதென்று நினைத்துக் கொண்டு அப்பால் சில வாரங்களுக்கு மிதமான தண்ணீர், (ஈரமில்லாமல் காயாதபடியும், சேறாகாமலும்.) ஊற்றி வந்தால் மறுபடியும் புது துளிர் விட்டுவரும். அப்படியும் வராவிடில் தெய்வச் செயலென்று விட்டுவிட வேண்டியதுதான். இந்த பாதை கரையான்களால் ஏற்பட்டிருந்தாலொழிய அதைப்பெயர்த்து வேறு இடத்தில் இந்த சந்தர்ப்பத்தில் வைக்கவே கூடாது.

கரையான்களால் அந்த பாதை ஏற்பட்டதாகத் தெரிந்தால் அப்போது வேர்கள் கெடாமல் அப்புறப்படுத்தி கரையான்களை யெல்லாம் ஒன்று விடாமல் எடுத்து தூரஎறிந்துவிட்டு வேறு இடத்தில் நடுதல் நலம்.

(3) ஒட்டுக்கு மேல் ஆடுகள் கடித்திருந்தால், தண்ணீர் கிரமமாய் ஊற்றிக் கொண்டு வந்தால் மறுபடியும் புதுத்துளிர்விட ஏதுவுண்டு. அவ்வாறில்லாமல் ஒட்டுக்குக்கீழ் ஆடுகடியால் முறிந்து போயிருந்தால் மட்டும் மறுபடியும் ஒட்டு துளிர் வராது. ஒட்டுக்கட்டிய கிளைகள் நன்றாயிருந்து துளிர்களையும் இலைகளையும் மட்டும் கடித்திருந்தால் திரும்பவும் துளிர்க்கும். ஆனால் மறுமுறையும் ஆடுமாடுகள் வந்து கடிக்காதபடி செடிகளுக்கு வேலி போட்டு பந்தோபஸ்து செய்வது அவசியம். இரண்டு மூன்று முறை அதே செடியை கடித்தால் மறுபடியும் செடி வருவது கஷ்டந்தான்.

(5) பேரிக்காய் சமதளங்களில் உண்டாகாது. உண்டானாலும் சரிவரக் காய்க்காது. சமுத்திர மட்டத்திற்கு மேல் அனேக அடிகள் உயரமிருக்கும் மலைப்பிரதேசங்களில் தான் காய்க்கும். நமது பிரிய நேயருக்கு அப்பேர்ப்பட்ட இடத்தில் நிலமிருந்தால் மட்டும்வைத்துப் பயிர்செய்யும்படி சிபார்சு செய்வோம். ஒட்டு பிளக்குகள் வைப்பதைவிட கன்றுகளுக்கும் தெ

ிர்து நல்ல ஜாதிப்பழம் வாங்கி சாப்பிட்டுப் பார்த்து பழத்தை மூடிக்கொண்டிருக்கும் சொலாக்குக் கீழிருக்கும் அடித்தோலை அப்புறப்படுத்தாமலும் அதன் ஈரம் காயுமுன்னும், விதைபோட்டு செடி உண்டாக்கி நட்டால் 5வருஷங்களில் காய்க்கும். ஒட்டுச்செடியும் வளர்த்து செடிக்கு நஷ்டமில்லாமல் காய்ப்பதற்குஎறக்குறைய அத்தனை வருஷங்கள் பிடிக்கும். செடிகள் தேவையானல் செடி வியாபாரிகளிடம் தான் வாங்க வேண்டும்.

(5) நாம் ஸ்ரீமான் சேலம் அப்துல் ரஹிமான் சாய்பு அவர்களிடம் இதுவரை வியாபாரம் செய்ததில்லையாகையால் நம்மால் அவர்களுடைய செடிகளைப் பற்றி அபிப்பிராயம் கொடுப்பதற்கில்லை. பங்களூர் எம்பையர் நர்சரியிலிருந்து பலமுறை நாம் செடிகள் வரவழைத்திருக்கிறோம். திருப்தியாகவே யிருந்திருக்கிறது.

(6) எந்த ஜாதி ஒட்டுமா வருஷா வருஷம் காய்க்குமென்று பலமுறை கிருஷிகன் வாயிலாகத் தெரிவித்திருந்தும் மறுபடியும் கேட்பது நமக்கு ஆச்சரியமாகவே யிருக்கிறது. நமக்குத் தெரிந்தவரையில் (1) ருமாணி (2] பெங்களூரா (3)நீலம் ஆகிய 3 ஜாதிகளும் இங்குவருஷா வருஷம் தவறாமல் காய்ப்பதோடு இந்த 3ஜாதி பழங்களும் மற்ற பழங்களெல்லாம் காய்ப்பு ஓய்ந்து அதிகப் பழங்களில்லாத காலத்தில் பழுக்க ஆரம்பிப்பதால் நல்ல விலைக்கும் விற்பதற்கேற்றதா யிருக்கிறது.மேலும் பல சாதாரண ஜாதிகளை விட சற்று அதிகநாட்கள் இப்பழங்கள் கெடாமலிருப்பதாலும் அதிக விலை பெறுகிறது.

4 ஆபீஸ் பளந்து அநேக வருஷங்களில் காய்த்தபோதிலும் நல்ல விலை பெறுவதில்லை. கிராக்கியுமிராது. 5. பீத்தர் மூன்று நான்கு வருஷங்களுக்கொரு முறைதான் காய்க்கும். மரம் பெரிதான பின்தான் காய்க்கும். 6 மல்கோவா நான்கு ஐந்து வருஷங்களுக் கொருமுறைதான் காய்க்கும். அதிகமாய்க் காய்க்காது. ஆனல் நல்ல விலைபெறும். நமது அபிப்பிராயத்தில் முன்னல்சொன்ன மூன்று தினுசுகளே வியாபாரத்திற்கும், வருஷா வருஷம் காய்ப்பதற்கும் ஏற்றதென நினைப்பதால் அந்த மூன்று தினுசுகளையே நாம் சிபார்சு செய்கிறோம். ஒட்டுச் செடிகள் வாங்குவதில் விலை சகாயத்தை மாத்திரம் கவனிக்கக்கூடாது. நம்பிக்கையுள்ள வியாபாரிகளைப் பார்த்து வாங்குவதுதான் நிறம். சேலத்தில் வாங்கும் செடிகள் சகாயமாயும், பெரிய செடிகளாயிருப்பினும் காய்ப்பதில்லை யென்ற கூக்குரல் அதிகமாயிருக்கிறது. யாராவது தெரிந்தவர்களிருந்து அவர்கள் மூலமாய் காய்க்கும் செடிகளில் ஒட்டுக்கட்டி யறுத்த செடிகளை வாங்குவது நலம், அவ்வித சாதனம் எங்கு அமையுமோ அங்கு வாங்குதல் நலம்.

(7) ரோஜா செடிகளில் சாதாரண ரோஜாபுஷ்பம்தான் அதிகமாகுல் கொடுக்கும். இது தஞ்சாவூர் ஜில்லா மன்னர் குடியில் வாங்கலாம். நமக்கு தெரிந்த வரையில் சுமார் 200ரோஜா ஜாதிகள் வரை பலவர்ணங்களிலுமிருக்கின்றன, அநேகர் இப்பயிரைப் பற்றிக் கேட்பதால் கூடிய ஜல்தியில் இதைப்பற்றிய தனி வியாசம் எழுதப்படும். ப. ச.

ஸ்ரீமான் பத்திராதிபர் அவர்களுக்கு மட்டப்பாறை வெங்கட்ராமய்யர் எழுதிக்கொண்டது. க்ஷேமம் கோருவதுமல்லாமல் தாங்கள் பிரசாரவேலையாய் போவதாகத் தெரிந்ததால் கடிதம் எழுதவில்லை; மன்னிக்கவும். தாங்கள் கிருபை செய்து அனுப்பிய 12 மால்டா எலுமிச்சைகள் பத்திரமாய் வந்து சேர்ந்தன. அவை கட்டும் ஆச்சுது. அதில் இன்னும் இரண்டொன்றுகள்தான் புதுத்தளிர் எடுக்கவில்லை. பாக்கிப்பத்தும் அரையடிக்குக் குறையாமல் கிம்பு வெடித்து நன்றாயிருக்கிறது. 1 தங்களுக்கு ஆஸ்ட்ரேலியா முந்திரிக் குச்சிகள் எப்பொழுது தேவை? தங்களை நேரில் சந்தித்தது முதல் என் மனதைக் கவர்ந்து விட்டதாக நம்புகிறேன். 2 நான் வைத்திருக்கும் எலுமிச்சை மா, முதலிய கன்றுகளுக்கு தாங்கள் சொல்லுகிறபடி மாதம் ஒருதரம் (விக்டூர் மெனியூர்) ஜலத்தில் சாணியைக் கரைத்து ஒரு வாரம் வரை ஊற வைத்துப் போடலாமென்றிருக்கிறேன். எவ்வளவு சாணியை எவ்வளவு ஜலத்தில் கரைத்து எலுமிச்சைக்கு எவ்வளவு அளவென்றும் மாவுக்கு எவ்வளவு அளவு உரம் வைக்கவேண்டுமென்றும் தயைசெய்து தெரியப்படுத்தக் கோருகிறேன். ஸ்ரீமான் திருமலையப்ப முதலியார் எனக்கு ரொம்ப சிரமப்பட்டு இந்தமாத சஞ்சிகையில் ஒரு பதில் கடிதம் எழுதியதற்கு வந்தனம். 3 போன வருஷம் கார்த்திகை மாதத்திலிருந்து பங்குனி மாதம் 28ம் தேதிவரை எங்கள் கிராமத்தில் ஒரு சொட்டுத் தூற்றல் கிடையாது. அதைக் குறித்த தோஷம் செடிகளுக்கு நிச்சயமாய் கிடையாதென்கிறீரே! (4) சாத்துகள் தேவையென்று சொல்லுகிறார். எங்கள் பக்கம் அகப்படும், சிறு நாற்றுகளாக இருக்கிறது. ஒன்றரை அடிக்குக் குறையாத தேவையானால் விசாரித்து எழுதுகிறேன். தங்கள் சர்தார் ஒருவர் அதாவது எடப்பாடிக்காரர் எனக்குக் கடிதம் எழுதியிருந்தார், எலுமிச்சைக்காக விசாரித்து பதில போட்டேன். அவர் பதிலே இதுவரை எழுதவில்லை 6 ஸ்ரீமான் ஜீ. ராஜகோபால் நாயுடுகாருக்கு மாலைக் குறித்து ஷையார் எழுதியிருக்கும் புஸ்தகத்திற்குப் பலதடவை கடிதம் எழுதினேன் கிடைக்கவில்லை. தயைசெய்து என் விலாசத்திற்கு வி, பி. மூலம் ஷை புஸ்தகம் ஒன்று எனக்குக் கிடைக்கும்படி செய்யக்கோருகிறேன். 7 தவிர தங்கள் பத்திரிகையில் கும்பகோணத்தில் ஒருபெண்பால் புலிக்குளம் பசுக்களும் காளையும் தேவையென்று எழுதியிருந்தார்கள். என்னிடம் பசுக்கள் நல்ல ஜாதியாக வைத்திருக்கிறேன். தற்சமயம் 30 பசுக்கள் வரை தேவையானால் தருகிறேன். அதற்கு மாப்பிள்ளைகாளை (பொலி எருதும்) கொடுக்கிறேன். பொலி எருது சுமார் 16 பிடி உயரத்திற்குக் குறையாது. நிறம் வெள்ளைமால் உயரத்திற்குத்தகுந்த நீளமும் நல்ல மேனிக்கட்டும் பார்த்தவர்கள் சந்தோஷமும் அடையக்கூடியது. காளையின் கிரயமட்டும் காரார் ரூ 350 ஆகும், பசுக்கள் சகட்டுமேனிக்கு (பெரிதும் சிறிதுமாகக் கலந்து) ஜோடி ரூபாய் 40க்குக் நலையாக தேவையானால் எழுதக்கோருகிறேன். ஷை காளையின் வயது தற்சமயம் ஆறுபல்

அதாவது ஐந்து வயதுக்குமேல்போனாலு பதிலுக்கும் ஸ்டாம்பு அனுப்பியிருக்கிறேன்.

தங்களன்பிற்குரிய,

ஆர். எஸ். வெங்கட்ராமய்யர்.

பதில்

1 ஆஸ்ட்ரேலியா முந்திரி (திராட்சை)க்குச்சி எப்போது அனுப்பினாலும் நட்டு பயிராக்கிக் கொள்ளக்கூடும். அவர்கள் கப்பாத்து செய்யும் சமையத்தான் வெட்டுவார்கள். அப்போது குச்சிகளை ஒரே ஒழுங்காய் விறைப்புகளுக்குக் காயம்படாமல் கத்தரித்து தார் எண்ணெயில்முனைகளைத் தோய்த்து மூன்று 4 கட்டுகள் கட்டி, சிக்கான கடிதத்தில் சுற்றி அன்ரிஜிஸ்டர்ட் பார்சலாய் அனுப்பினால் அரை இராத்தல் இடைக்கு 2 அணாவும் ஒரு ராத்தலுக்கு அதிகப்படாமல் 3 அணா தபால் பில்லைகளும் ஒட்டி அனுப்பினால் சேர்ந்துவிடும்.

2 பெரிய மரத்தொட்டி அல்லது மண்தொட்டி அல்லது கொப்பரைகளில் சாணியைப்போட்டு தண்ணீர் ஊற்றி நன்றாய்க்கரைத்துவிடவேண்டியது. 2கூடை சாணி போட்டால் 4 குடம் தண்ணீரும் கொஞ்சம்மூத்திரமும் ஊற்றிகரைத்தபின் பார்த்தால் தோசைக்குஊற்றும் மாவைப்போல் இருக்கவேண்டும், அவ்வாறு கரைத்து வைத்ததுமுதல் நித்யம் காலைமாலைகளில கரைத்துவைத்த சாணி கெட்டியாகாதபடியும் மேலே காய்ந்து அடையாகாதபடியும் நன்றாய்க் கிளறிக்கொடுத்துக் கொண்டுவர வேண்டும். இவ்வாறு ஒருவாரம் கலக்கிக் கொண்டுவந்தபின் வேறு ஒருபெரிய பாத்திரம் பக்கத்தில் கொண்டுவந்து வைத்து அதில் கரைத்துவைத்த சாணித்தண்ணீரில் ஒருகுடம் மொண்டு ஊற்றி அத்துடன் 5குடம் சாதாத் தண்ணீர் ஊற்றி நன்றாய்க்கலக்கி ஒவ்வொரு செடிக்கு (இந்த ஒருகுடத்தை ஆறுகுடமாக்கிய சாணித்தண்ணீரில்) ஒருகுடத்தண்ணீரை எடுத்து அதற்கு முன் செடிக்குழிகளைபோட்டு வைத்திருக்கும் செடியைச் சுற்றிஊற்றி அத்துடன் தண்ணீர் பாய்வதானால் பாய்ச்சவேண்டும் இல்லாவிடில் 2குடம் வெறும்தண்ணீர் ஊற்றவேண்டும் இது பூமியில்வைத்த செடிகளுக்குக்கணக்கு. தொட்டிகளிலிருப்பதாகில் ஒருகுடத்தை 6 குடங்களாக்கிய தண்ணீரில் ஒவ்வொரு செம்பு தண்ணீர்ஊற்றி அத்துடன் பச்சைத் தண்ணீர் 2செம்புகள் ஊற்றி வரவேண்டும், சாணிகலந்த தண்ணீர் இலைகளின் மேல் படாமல் வேரைச் சுற்றி ஊற்றவேண்டும். இதற்கு முந்திய தண்ணீர் ஊற்றின உடனேயே பாய்ச்சின உடனேயோ பதத்தில் களை வெட்டியிருப்பது அவசியம். அப்போதுதான் இந்த உரத்தண்ணீர் நேராக வேர்களுக்கு உறைக்கும். சாணித் தண்ணீரை லிக்யுட்எருவாகக்கொடுக்கும்போது இவ்வாறு செய்யலாமேதவிர வேறாவது ரசாயன எருக்களைக் கரைத்து ஊற்றும்போது இவ்வாறு செய்யக்கூடாது. ஏனென்றால் அந்த ரசாயன எருக்கள் நேராக வேரில் பட்டமாத்திரத்தில் செடிகள் பட்டுப்போகும்.

3. மழைபெய்யாததால் தோஷம் இல்லையென்று சொல்வது முற்றிலும் ஒப்பத்தக்கதல்ல. மழைத்தண்ணீர் தாய்ப்பாலுக்கும், மற்றத் தண்ணீர் இதர ஆகாரங்களுக்குந்தான் ஒக்கும். இதையனுசரித்தே "தாய்முகம் காணாதசேயும், மழைமுகம் காணாத பயிரும்" என ஆன்றோர் ஒப்பிட்டிருக்கிறார்கள்.

4. அங்கு அகப்படும் நாத்துகளின் அளவையும், விலையையும், விற்போரின் முழுவிலாசமும், ரெயில்வே ஸ்டேஷனையும் பத்திரிகை வாயிலாகத் தெரிவித்தால் வேண்டியவர்கள் நேரில் எழுதிப் பெற்றுக் கொள்ளுவார்

5. சாதாரணமாய் எழுதும் கடிதங்களுக்கு பதில் அனுப்புவது நியாயம். அதிலும் அவர்கள் எழுதிய விஷயங்களுக்குப் பதில் தருவதற்காகவன்றி பாருட்டுவது நலம். ஏதாவது அசந்தர்ப்பத்தினால்தான் பதில் தரவில்லையென நம்புகிறோம்.

6. ஸ்ரீமான் இராஜகோபால் நாயுடுகாருல் வெளியிடப் பட்ட மா என்னும் புஸ்தகமானது செலவாகி விட்டதாகவும் ஆகையால் புஸ்தகவிளம்பரத்தில் 'மா'வென்னும் விளம்பரத்தை நிறுத்தி விடும்படியும் ஸ்ரீமான் நாயுடவர்கள் தெரிவிக்கிறார்கள்.

7. கும்பகோணம் மகாமககுளம் தென்கரையிலிருக்கும் ஜவுளி வியாபாரம் ஸ்ரீமதி ராம லக்ஷ்மியம்மாளவர்கள் தான் ஷெஜாதி மாடுகளுக்காக எழுதினார்களென்று நம்புகிறோம். எக்காரணத்தினாலோ, அவர்கள் இவ்வருஷம் வி.பி யைப்பெறவில்லை. ஆகையால் நேரில் எழுதுவது நலமென நினைக்கிறேன். மேற்படி பசுக்கள் எவ்வளவு பால் கொடுக்கும் முதலிய விவரங்களைத் தெரிவிப்பீர்களாகில் பத்திரிகையில் வெளியிடுகிறேன். அப்போது தேவையானவர்கள் வாங்கிக் கொள்ளுகிறார்கள்.

## NEWS & NOTES

### சமாசாரக் குறிப்புகள்

இம்பீரியல் விவசாய ஆராய்ச்சி நிர்வாக சபை ஆலோசனை சொல்லும் போர்டில் யூனிவர்சிட்டிகளின் பிரதிநிதியாய் கோயம்புத்தூர் விவசாயகாலேஜில் தற்காலம் பிரின்ஸிபால் உத்தியோகம் வகித்துவரும் ஸ்ரீமான் தாதுலிங்கம் முதலியார் எப். எல் எஸ் அவர்களை நியமித்திருப்பதாக கேள்விப்பட்டு சந்தோஷிக்கிறோம்

ஷை யாருக்கு நமது மனமார்ந்த குதூகுலத்தைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம், ஷை யார் கோயம்புத்தூர் விவசாய கலாசாலை பிரின்ஸிபாலாயும், சோதனை மண்டபத்தில் சேர்ந்து வேலைசெய்து ஒரு பிரிவில் தலைமை வகித்தவராயும் அநேகமாய் சுமார் 25 வருஷத்திற்கு மேற்பட்ட நெருங்கிய சம்பந்தமும் அநுபோகமும் உடையவர்களாகையால், மற்ற சாதாரண அங்கத்தினரைப்போல் இந்நிர்வாக சபையில் இருக்காமல் ஜனங்களுக்குத் தொனி பொருந்த மட்டிலாவது வேண்டிய அவசியமான [illegible]

பயன்படாமலும், பிரதியுபகாரங்களை எதிர்பாராமலும் பொது ஜனங்களையும் தேச முன்னேற்றத்தையும் விருத்தி செய்யும்படியான மார்க்கங்களையும் அநுசரித்து பிரசாரம் செய்வார்களென்றே எதிர்பார்க்கிறோம்.

*　　*　　*　　*

நமது இராஜதானியில் கோயம்புத்தூர் காசியாயும் ரிவினியூ டிபார்ட்மெண்டில் பல உத்தியோகங்கள் வகித்து ரிவினியூ போர்டில் செக்ரடரி உத்தியோகமும் இண்டஸ்டிரியல் டிபார்ட்மெண்டில் டைரெக்டர் உத்யோகமும் வகித்து, சென்னையில் முதலில் அகில இந்திய கண்காட்சி செக்ரட்டரியாயும் அப்பால் இங்கிலாந்தில் நடந்தேறிய வெம்பிளி கண்காட்சியில் இந்திய பிரிவுக்கு கமிஷனராகவும் நடத்தி பின்னர் பப்ளிக் சர்வீஸ் கமிஷனில் அங்கத்தினராயிருந்த ஸ்ரீமான் ஸர். டி. விஜயராகவாச்சாரியாரவர்களை இம்பீரியல் விவசாய ஆராய்ச்சி நிர்வாக சபையில் முதன்மை ஸ்தானத்திற்கு நியமித்ததற்காக நாம் கவர்ன்மெண்டாருக்கு நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

*　　*　　*　　*

கோயம்புத்தூர் சோதனை மண்டபத்து நெல் அபிவிருத்தி செக்ஷனிலிருந்து இங்கிலாந்துக்கு வித்தியா அபிவிருத்தி விஷயமாய் அனுப்பப்பட்ட ஸ்ரீமான் கே. ராமய்யா அவர்கள் எம். எஸ். ஸி. பட்டம் பெற்று திரும்பி வந்திருக்கிறார். இவர் நமது நாட்டின் பழக்கங்களுடன் இங்கு விவசாயப் பட்டம் பெற்றதோடு இங்கிலாந்து சென்று அந்தம தேர்ச்சி அடைந்து வந்திருப்பதால் அவர் நெல் அபிவிருத்தி விஷயத்தில் இரண்டு தேசங்களிலும் கிடைத்த அநுபோகமும் தேர்ச்சியும் கொண்டு இவ்விராஜதானியில் வேண்டிய உபகாரம் நெல் அபிவிருத்தியில் செய்யவேண்டியது அவர் பொறுப்பு. அப்படிச்செய்தால் மற்ற இளைஞர்களையும் கவர்ன்மெண்டார் அனுப்ப ஓர் தூண்டுகோலாயிருக்கும்.

*　　*　　*　　*

கோயமுத்தூர் விவசாய காலேஜில் எல். ஏ. ஜி. பட்டம் பெற்று மைசூர் சமஸ்தானத்தில் விவசாய டிபார்ட்மெண்டில் கொஞ்சகாலம் வேலை செய்து இங்கிலாந்துக்குப் போய்த்திரும்பி வந்த ஸ்ரீமான் பாதாமி வெங்கடராவ் அவர்களுக்கு பி. எச். டி. பட்டம் கொடுத்திருப்பதைக் கேட்க சந்தோஷிக்கிறோம். இப்படி அநேக இளைஞர்கள் மேல் நாட்டிற்குச் சென்று அநுபோகத்தையும் பட்டங்களையும் பெறுவதால் நமது தேசம் கூடிய ஜல்தியில் முன்னேற்றமடையுமென்பதில் சந்தேகமில்லை.

# திருஷிகன் பஞ்சாங்கம்

சுக்லஹு ஆவணிமீ —சாலிவாகன 1852 கலியுகாதி 5031 பசலி 1329

கொல்லம் 1105 இங்கிலீஷ் 1929ம் ஹு ஆகஸ்டு—செப்டம்பர் மீ

| ரபியுலவல் | ஆகஸ்டு | ஆவணி | வாரம் | திதி | நக்ஷத்திரம் | யோகம் | விசேஷங்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| 10 | 16 | 1 | வெ | ஏகா 7-22 | மூல 15-26 | அ 15ம | வரலக்ஷ்மிவிரதம் |
| 11 | 17 | 2 | சனி | துவா 12-10 | பூரா 21.51 | சி 60 | கரிநாள் |
| 12 | 18 | 3 | ஞா | திர 17-2 | உத் 27:58 | அ 60 | முகூர்த்தம் |
| 13 | 19 | 4 | தி | சது 21-11 | திரு 33-30 | அ 33சி | ருக்வேத உபாகர்ம |
| 14 | 20 | 5 | செ | ○ ப 24-25 | அவி 38.6 | சி 38ம | யஜுர்வேத உபாகர்ம |
| 15 | 21 | 6 | புத | பிர 26-34 | சத 41-38 | சி 42அ | சங்கடம் உண்டாக்க |
| 16 | 22 | 7 | வி | துதி 27_31 | பூட் 43-57 | சி 60 | கரும்புநட |
| 17 | 23 | 8 | வெ | திரு 27_9 | உட் 44-56 | சி 45அ | முகூர்த்தம் |
| 18 | 24 | 9 | சனி | சது 25-53 | ரே 44-49 | ம 45சி | கரிநாள் |
| 19 | 25 | 10 | ஞா | பஞ் 22-51 | அஸ் 43.35 | சி 43ம | முகூர்த்தம் |
| 20 | 26 | 11 | தி | சஷ் 19-6 | பர 41-21 | சி 41ம | மழைபெய்யவரம் |
| 21 | 27 | 12 | செ | சப் 14-31 | *கி 38-24 | சி 38அ | கோகுலாஷ்டமி |
| 22 | 28 | 13 | புத | அஷ் 9-20 | ரோ 34-55 | சி 60 | கிருஷ்ணஜயந்தி |
| 23 | 29 | 14 | வி | நவ 3-40<br>தச 53-58 | மிரு 31 0 | ம 60 | உபநயனம் |
| 24 | 30 | 15 | வெ | ஏகா 51-34 | திரு 26_55 | சி 60 | கிணறுவெட்டுக்க |
| 25 | 31 | 16 | ச | துவா 45-38 | புன 22_50 | சி 06 | மழைபெய்யவரம் |
| 26 | 1 | 17 | ஞா | திர 40-1 | பூச 19_0 | சி 60 | முகூர்த்தம் |
| 27 | 2 | 18 | தி | சது 34-50 | ஆயி 15-33 | சி 15ம | துலைகட்ட |
| 28 | 3 | 19 | செ | ● 30-21 | மக 12-39 | சி 60 | சர்வஅமாவாசை |
| 29 | 4 | 20 | புத | பிர 26-42 | பூர 10-35 | அ 60 | குடிபோட |
| 1 | 5 | 21 | வி | துதி 24-3 | உத் 9-26 | ம 9சி | சாமவேதஉபா |
| 2 | 6 | 22 | வெ | திரி 22-33 | அஸ் 9.25 | அ 9சி | முகூர்த்தம் |
| 3 | 7 | 23 | சனி | சது 20_34 | சித் 10-35 | ம 11அ | விநாயகசதுர்த்தி |
| 4 | 8 | 24 | ஞா | பஞ் 23-15 | சுவா 13-0 | சி 13ம | முகூர்த்தம் |
| 5 | 9 | 25 | தி | சஷ் 25 31- | விசா 16-4 | ம 17சி | விதைவிதைக்க |
| 6 | 10 | 26 | செ | சப் 22-58 | அநு 21.30 | சி 21ம | ருதுகமனேபுகுதல் |
| 7 | 11 | 27 | புத | அஷ் 38_9 | கே 27-2 | சி 27ம | குடிபோட |
| 8 | 12 | 28 | வி | நவ 37 56 | மூல 33.12 | சி 60 | கரிநாள் |
| 9 | 13 | 29 | வெ | தச 43-2 | பூரா 39-39 | ம 40சி | மாவேர்க்க |
| 10 | 14 | 30 | சனி | ஏகா 47-54 | உத் 45.55 | சி 60 | மழைபெய்யவரம் |
| 11 | 15 | 31 | ஞா | துவா 52-8 | திரு 51.35 | அ 51ம | என்விதைக்க |

## THE JOURNAL OF THE
## Madras Agricultural Students Union

A Monthly Journal in English devoted to the Study of Improved Agriculture. Artlicles of Scientific and general interest are published along with Extracts and reviews from various Journals both Indian and foreign: Subscription per annum Rs Four. Sinlge copy As Six

Apply to Manager M. A. S. U. Journal
Agricultural college, Lawley Road P O.
Coimbatore.

---

ஸ்ரீமதி வை மு. கோதநாயகி அம்மாள் எழுதிய
"சண்பகவிஜயம்"

'இந்த நாவல் இது சிறந்த நாவல்' படிப்பதில் ஆர்வ முடையோர் புகழத்தக்கபடி நாவலுக்குரிய இலக்ஷணங்களுடன் அமைந்திருக்கிறது. இதனைப் படிக்கத்தொடங்கினால் முடிக்காமல் புத்தகத்தைக் கீழேவைக்க மனம் வாராது.

இது பாலவிநோதினிப் பத்திராசிரியராகிய வரகவி. திரு-அ சுப்ரமண்ய பாரதியார் எழுதிய முகவுரையுடன் கூடியது. இதுவரையில் எழுதி வெளிவந்த நாவல்களைவிட இதில் சிறுவரும், சிறுமியரும் உவந்து படிக்கவும், போற்றவும் படித்ததை நினைக்கவும், பிறருக்குச்சொல்லிப் புகழவும் தக்கபடி உயர்ந்த நீதிகளையும், உலகபோக்கையும், கற்பின் பிரபாவத்தையும், பெரியாரின் பெருமையையும் நல்லோரின் நடவடிக்கைகளையும் உத்தமகுணப்பெண்ணின் இலக்ஷணங்களையும் அநேகமேற்கோள்களுடன் விளங்கவைத்திருக்கிறபடியால், இந்த நாவல் கேவலம் நாவல் வகையில் எண்ணிப் புறக்கணிக்கத்தக்கதல்ல; போற்றத்தக்கதேயாம். விலை ரூ 1—12—0

ஜெகன்மோகினி ஆபீஸ், திருவல்லிக்கேணி சென்னை

---

### விவசாயப் புத்தகங்கள்

| | ரூ. அ. பை |
|---|---|
| விவசாய விளக்கம் | 1—4—0 |
| நெல் | 1—0—0 |
| கரும்பு | 1—0—0 |

தபால்சார்ஜ் வி. பி. முதலியன பிரத்தியேகம்.

ஜீ. இராஜகோபால் நாயுடு
பென்ஷண்ட் விவசாய இன்ஸ்பெக்டர்
பெரியபாளையம். பொன்னேரிமார்க்கம்.


---


Printed and Publisheb by J. R Rangaraju
at the Raju Press Jagannatha Baugh Saidapet.